# மித்ரா டைம்ஸ்

MITRA TIMES

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

Tamil & English Monthly

ஆண்டு–4 Volume - 4 | இதழ்–3 Issue -3 | ஆகஸ்ட்–2018 August - 2018 | விலை ரூ.20/– Price Rs.20/- | ஆண்டு சந்தா ரூ.240/– Annual Subscription Rs.240/-




## கோபம் குறைய லாபம் பெருகும்!

- ஆசிரியர் கடிதம்



## சுதந்திர இந்தியாவும் தந்திர அரசியலும்!



## கலைஞரின் “வில் பவர்”



## கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத காவிரித் தண்ணீர்!

# MITRA INTERNATIONAL BUSINESS CLUB

## LAKE VIEW CLUB & SUITES

### INVESTORS ARE INVITED



Proposed Project Located at No.1 Jawarlal Nehru Road – Ponniamman medu-Koluthur Chennai 600099 –Owned by KRM Home Makers Private Limited and Promoters of MIBC planned to have 30 years of Long Leasing for the purpose of existing building modifying to the concept and Launching their Dream project which will be First of its kind in the State of Tamilnadu having "Lake View Club & Suites" to cater to the Vast needs of North Chennai up to nearly 100 KM towards Gumudipoondi and Nellore of Andhra State as there is no such concept exist below planned facilities to Business Communities and their families

## CLUB

CLUB Facilities :Portico/Reception / Lobby/ Multi Cuisine Restaurant 75 to 100 covers / Coffeeshop 30 to 50 covers /Cake shop/ Bars Two-Common one and Cozy Bar /Room service / Cards Rooms Two/Two Party Halls with average 100 covers Theater style /Conference Halls two for 10 to 20 persons capacity/ Mini Theater 120 seaters/ Business Center/ Indoor & Children games/Spa/Gym/ Super Market wit Exclusive Club Entrance for Guests and separate Staff Entrance/Security-Time office access

Accommodation :One Exclusive Floor of 11 Suitesof 25 Bed rooms for Members/Guests Club Accommodation

Pool & Boat Club: And Open air / Covered Swimming Pool +Children Pool with Club Private Boat Clubs services with Car Parking -Sufficient Car Parking for Club Members at Basement &Ground levels

... Contd On Page: 51

# உள்ளே...




15000 ஆசிரியைகளை உருவாக்கிய கல்வியாளர் திருமதி ந.விஜயா 6



கலைஞரின் “வில் பவர்” 10




உருவமே இல்லாத சிவத் திருத்தலம் 24



வெற்றிக்கு வழிகாட்டுகிறார் விப்ரோ தலைவர் 22

எம் பதில்கள் 43




கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத காவிரித் தண்ணீர்! 40



சருமத்தைப் பாதுகாக்க... 34



நமக்கு நாமே மருத்துவர்! 30



ரஜினி, கமல் கற்க வேண்டிய எம்.ஜி.ஆர் பாடம்? 43

ஆசிரியர் கடிதம்



# கோபம் குறைய லாபம் பெருகும்!

*அன்புடையீர்!*

வணக்கம். மனித உணர்வுகளில் ஒன்று கோபம். கோபம் என்பது உடல் ரீதியாக, மனரீதியாக, சமூக ரீதியாக, உளவியல் ரீதியாக ஏற்படுகிறது. நாம் சொல்வதை, பிறர் கேட்காதபோதும் நம்முடைய பிரச்சனை தீர்க்கச் சொல்லும்போது அதை தீர்க்காதபோது, நாம் சொல்வது தவறாக இருந்தாலும் அடுத்தவர்கள் அதை விமர்சனம் செய்யும்போது கோபம் தலைதூக்கும். அதைப்போல் அடுத்தவர் நம்மை மதிக்காதபோதும் நம் உள்ளத்தில் எட்டிப்பார்க்கும் 'ஈகோ'வே கோபமாக மாறுகிறது.

பிறர் சொல்வது சரியானதாக இருந்தாலும் அதைப்பற்றிய சிந்தனை இல்லாதபோதும் அல்லது நாமே கட்டுப்படுத்திக்கொள்ளும் போதும் கோபம் வரும். ஒரு மனிதனின் வெற்றிக்கு தடையாக இருப்பது கோபம்.

''ஆறுவது சினம்'' என்றார் ஔவையார்.

''கோபத்தோடு எழுகிறவன் நஷ்டத்தோடு உட்காருகிறான்'' என்கிறது பைபிள். எனவே கோபம் குறைந்தால் லாபம் பெருகும் என்பது உண்மை.

கோபம் கொள்வதால் நமது சிந்தனை, கவனம் போன்றன சிதறடிக்கப்படுகின்றன. சரியான சமயத்தில் செய்ய வேண்டிய செயல்கள் இதனால் பாதிக்கப் படுகின்றன. நம்மை சுற்றி இருப் பவர்களைப் பற்றியும் சூழ்நிலை யையும் உணராது நமதுசெயல்கள் பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

வாழ்வின் சந்தோசத்தை பறித்து விடும். (கோபமும் சந்தோசமும் ஒன்றுக்கொன்று எதிரானவைகள்)

திருமணம் மற்றுமுள்ள தொடர்புகளை அழித்து விடும்.

தொழிலை முடக்கி விடும். காரணம் தொழில் என்பது தொடர்புகளுடன் சம்பந்தப்பட்டது.

மனஇறுக்கத்தை ஏற்படுத்தி இருதய வியாதிக்கு வழிவகுக்கும்.

முறையாக சிந்தித்து செயல்படுவதை தடுத்து நமது செயல்களை தவறானதாக்கி விடுகின்றது.

கோபம், மாரடைப்பு முதலான இருதய நோய்களை உண்டாக்கி உயிரைப் பறித்து விடும் என்று வல்லுநர்கள் கூறுகின்றார்கள. 55 வயதுக்கு கீழே உள்ளவர்கள் கோபப்பட்டால் அவர்கள் மாரடைப்பு உள்ளிட்ட இருதய வியாதிகளால் உயிரிழப்பதற்கான வாய்ப்பு 3 மடங்கு ஆகும். ஆனால் 55 வயதுக்கு கூடுதலாக இருந்தால் உயிரிழப்பு ஆபத்து 6 மடங்காக உயர்கிறது.


என் எண்ணம்

கோபமானது இதய ரத்த நாளங்களை கடினமாக்கும் அடைப்புகளை திடீரென சிதைப்பதால், அங்கே அடைப்பு வேகமாக உண்டாக வாய்ப்பு ஏற்படும். இது மாரடைப்பில் விட்டு விடும்.

இதயத் தசைகளில் வலிப்பு, இதயத் துடிப்பில் பாதிப்பு, உயர்

ரத்த அழுத்தம், ஆஞ்சைனா எனப்படும் நிலையற்ற நெஞ்சுவலி போன்ற சிக்கல்களும் கோபத்தினால் ஏற்படும் விளைவுகள் தான்.

மூளையை தாக்கும் பக்க வாதத்துக்கு கூட கோபம் காரணமாக அமைவதுண்டு.

கோபம் வரும்போது குறிப்பிட்ட மனிதன் தன்னிலை இழக்கிறான். இதனால் தான், கோபத்தில் கொந்தளிப்பவர்களுக்கு வியர்வை, நடுக்கம், மூக்கு விடைத்துக் கொள்தல், தூக்கமின்மை, ஓய்வின்மை, நெஞ்சுவலி, மாரடைப்பு, ரத்த அழுத்தம் திடீரென அதிகரித்தல், எரிச்சல், தசைகள் கெட்டித்தன்மை ஆவது, தலைவலி போன்ற பல பிரச்சினைகள் தோன்று கின்றன.

கோபத்தின் முக்கிய காரணியான வெறுப்பை கைவிடுங்கள். மற்றவர்களையும் அன்போடு பாருங்கள். நிதானமாக கோபமூட்டிய நபரின் சூழ்நிலையை சிந்தியுங்கள்.

கோபத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை தவிர்த்திடுங்கள். உடனே உங்கள் மனதை வேறு விசயத்தில் திருப்புங்கள்.

அவசரம் ஒருபோதும் வேண்டாம். பொறுமையாக இருங்கள் நேரம் மேம்பாடு மற்றும் சுய கட்டுப்பாட்டை கடைப்பிடியுங்கள். செய்யும் வேலையை நேசத்துடனும், நேர்மையுடனும், குழப்பம் இல்லாமலும் செய்யுங்கள்.

கோபம் வருகிற சூழ்நிலைகளில் அதிகம் பேசாதீர்கள். மௌனமாக இருங்கள்

நமது கௌரவம் பாதிக்கப்பட்டதை மறந்து மற்றவர்களை விட நமக்கு இறைவன் அளித்த வாய்ப்புகளை நினைத்து இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

எவ்வளவு கோபம் ஏற்படுகிறதோ, அதைப் பொறுத்து 1 முதல் 100 வரையிலான எண்களை எண்ணிடுங்கள்.

சில நிமிடத்திற்கு உங்களது சூழ்நிலையை மாற்றுங்கள். அமர்ந்திருந்தால் எழுந்து நடங்கள். நடந்து கொண்டிருந்தால் சற்று நின்று கொள்ளுங்கள்.

கோபம் வருகிறது என்று தெரிந்ததும், ஒரு டம்ளர் தண்ணீர் குடியுங்கள்.

முகத்தை கழுவுங்கள். அல்லது ஒரு சுகமான குளியல் போடுங்கள்.

நீண்ட நாள் சந்தோசமாக வாழ வேண்டு மானால் நிச்சயம் நாம் கோபத்தை குறைத்தாக வேண்டும்.

கோபத்திலிருந்து எப்படி வெற்றிக் கொள்வது என்பதை அறிந்துகொண்டு எப்படி சமாளிப்பது என்பதையும் புரிந்துவைத்துக்கொண்டால் கோபம் குறையும் லாபம் பெருகும். வெற்றி பெறுவதும் சுலபம்.

**எம்.எஸ்.மூர்த்தி**


# மித்ரா டைம்ஸ்

**மித்ரா 4 ஆகஸ்ட் 2018 டைம்ஸ் 3**

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்
**மணவூர் கி.விடாரண்யம்** பி.ஏ., பி.ஜி.எல்.,
9789837069 / 6379283750

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

செய்தி இணை ஆசிரியர்
N. **ரமேஷ்குமார்**

செய்தியாளர்கள்
N. **மணிவன்னன் (நாகை)**
**மோகன்ராஜ் (காஞ்சிபுரம்)**
S. **முத்துராஜ் (கோவை)**

இணையதள செய்தியாளர்கள்
S. **சுருதிலட்சுமி** (B.Sc.,)
B. **பத்ரி** B.Sc., (Vis com)

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

**வடிவமைப்பு**
**சிவா சௌந்தர்,**
திருமதி. **நிரோஷாதிலிப்**

**விளம்பரம், சந்தா தொடர்புக்கு**
**044-23743007/8**

**அலுவலகம்:**
001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை94.
போன் : 044-23744661,23743007/8

**Whatsapp No. 8248585067**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**

# 15000 ஆசிரியைகளை உருவாக்கிய கல்வியாளர்

# திருமதி ந.விஜயா



வணிகவியல் முதுநிலைப் பட்டதாரியான இவர் சிட்டி வங்கியில் பணிபுரிந்து பின் திருமணத்திற்குப் பின் குழந்தைகள் மீதான தனி ஆர்வத்தால் கேரளா, பாலக்காட்டில் மழலையர்களுக்கான பள்ளியைத் துவக்கினார். மாண்டிசோரிக் கல்வியில் தனித்துவம் பெற விரும்பிய இவர் மாண்டிசோரி கல்வியைக் கற்று அமெரிக்கன் மாண்டிசோரி சமூகத்தில் உறுப்பினரானார்.

சென்னையில் 2001 ஆம் ஆண்டு இயக்குநரின் ஆசியுடன் ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் துவக்கினார். அவ்வருடம் ஒரே ஒரு மாணவியுடன் தொடங்கிய அப்பள்ளி இன்று 15000க்கும் மேற்பட்ட ஆசிரியைகளுக்குப் பயிற்சி அளித்து சிறந்த பெயருடன் திகழ்கிறது. தன் முயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் சென்னையில் 35 இடங்களிலும், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகாவிலும் பல கிளைகளைத் தோற்றுவித்துள்ளார். தனித்தன்மை வாய்ந்த பாடத்திட்டத்தாலும், சிறந்த விரிவுரையாளர்களைக் கொண்டு கற்பிப்பதாலும் இங்கு பயின்ற ஆசிரியைகள் சிறந்த பள்ளிகளில் தமிழ்நாடு, இந்தியா மட்டுமல்ல, அயல் நாடுகளிலும் பணிபுரிகின்றனர்.

மத்திய அரசின் மக்கள் கல்வி நிறுவனம், மற்றும் பாரத் சேவக் சமாஜ் ஆகிய இரண்டிலும் உறுப்பினராகி மத்திய அரசின் அனுமதி பெற்ற சான்றிதழ் / பட்டயப் பயிற்சிகளை வழங்கி வருகிறார்.

குழுவின் செயல்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ள இவர் வெங்கடேஸ்வராவின்





பல கிளைகளின் ஒருங்கிணைப் பாளர்களைக் கொண்டு ஒரு சிறந்த குழுவை உருவாக்கியுள்ளார். மேலும் ''துளிர்'' என்ற பெயரில் மழலையர் பள்ளி தொடங்குவதற்கு ஆலோசனை வழங்குவதோடு வெங்கடேஸ்வரா பள்ளியுடன் இணைந்து செயல்படுவதற்கும் உதவி செய்கிறார் சென்னை கலாஷேத்ராவில் நடைபெற்ற அகில இந்திய மாண்டிசோரி காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்.

செய்தித் துறையிலும் இவர் தன் முத்திரையைப் பதித்துள்ளார். உள்ளூர் பதிப்பான ''வடபழனி எக்ஸ்பிரஸ்'' எனும் இலவச செய்தித்தாளுக்கு பதிப்பாசிரியராக இருந்து வருகிறார். மேலும் தொழிலதிபர் என்னும் இதழுக்கு உதவி பதிப்பாசிரியராக இருக்கிறார். இவர் கல்வித்துறையிலும், சமூக மற்றும் ஊடகங்களால் அறிந்து கொள்ளப்பட்டு பல்வேறு விருதுகளை வாங்கியுள்ளார். அவற்றில் சில :

**மல்லிகை மகள், குமுதம் சிநேகிதி, தினமலர், மங்கையர் மலர் போன்ற இதழ்களிலும் சன் டிவி, ஜெயா டிவி, புதிய தலை முறை, நியூஸ் 7 அலை வரிசைகளிலும் மாண்டிசோரி கல்வி பற்றிய பேட்டியை அளித்து சிறந்த கல்வி யாளராகத் திகழ்கிறார்.**

*2003*ல் ஸ்ரீ காஞ்சி சங்கர மடத்தின் சார்பில் ''சிறந்த மாண்டிசோரி கல்வியாளர்'' விருது கிடைக்கப் பெற்றது.

*2005*ல் ''சிறந்த குழந்தைக் கல்வியாளர்'' விருது.

*2008*ல் ''சாதனைச் செம்மல்'' விருது.

*2011*ல் ஸ்ரீ வெங்கடேஸ்வரா வின் ஒருங்கிணைப்பாளர்களால் ''சிற்பி'' விருது

*2013*ம் மனித நேயத்திற்காக ''எம்.ஜி.ஆர்'' விருதினைப் பெற்றார்.

*2016*ல் ''சாதனைப் பெண்'' விருது.

*2017*ல் ''மழலையர் மணி விளக்கு'' எனும் விருதும் கிடைக்கப் பெற்றார்.

சமீபத்தில் ''பிராமின் டுடே'' இதழின் சார்பில் ''சிரேஷ்ட புருஷகா'' விருதும், சிவ நேயப் பேரவையின் சார்பில் ''மழலை நகுநல் மாமணி'' என்ற விருதும் வழங்கப்பட்டன.

மகளிர் தினக் கொண்டாட்டத்தை ஒட்டி நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் ''ஆளுமைப் பெண்கள்'' விருதும் திரைப்பட இயக்குநர் எஸ். எஸ். குமரன் வழங்கி கௌரவித்தார். இவர் மல்லிகை மகள், குமுதம், சிநேகிதி, தினமலர், மங்கையர் மலர் போன்ற இதழ்களிலும் சன் டிவி, ஜெயா டிவி, புதிய தலை முறை, நியூஸ் 7 அலை வரிசைகளிலும் மாண்டிசோரி கல்வி பற்றிய பேட்டியை அளித்து சிறந்த கல்வியாளராகத் திகழ்கிறார்.

பெண் கல்வியாளர்கள் ஊக்குவிக்கும் இவரது பணி தொடரட்டும்.

**– திருமதி. சுஜாதாமூர்த்தி**





# சுதந்திர இந்தியாவும் தந்திர அரசியலும்!

இன்னுயிர் பல தந்து அமைதியாகவும் ஆயுதங்கள் எந்தியும் 300 ஆண்டுகால அந்நிய அரசை விரட்டி 71 ஆண்டுகளுக்கு முன்பு பெற்ற சுதந்திரம் இன்று சிலரின் சுயநலத்திற்காக தொடர்ந்து இந்தியாவை சிலர் தேச நலனை கருத்தில் கொள்ளாமல் அன்னிய மற்றும் வர்த்தக நலனுக்காகவே மட்டுமே இந்தியாவை ஒரு சந்தையாகவே மாற்றி இருக்கிறார்கள். ஆட்சி, அதிகாரம் என்று மக்களை நிர்வகிக்க கொண்டுவரப்பட்ட அனைத்து அதிகார அமைப்பும் இன்று மக்களுக்கு எதிராகவே செயல்பட்டு வருகிறது.

காலங்கள் மாறிக்கொண்டே தான் இருக்கிறது. காலங்கள் மாற்றத்தை எதிர்நோக்கியே பீடுநடை போடுகிறது. மாறிட முனைந்த மனிதனிடம் மாறாமல் இருப்பது சுதந்திர உணர்வுகள் மட்டும் தான். ஒரு உயிர் இந்த மண்ணின் கதவுகளை தட்டும் பொழுதே அழுகுரல் எழுப்பி தன் பேச்சு சுதந்திரத்தை அறிவிக்கிறது. கை கால்களை அசைத்து தன் உடல் எழுந்து நடக்க, ஆடிட, ஓடிட முற்படுகிறது. சுதந்திரமாய் சிந்தித்திட ஆசை கொள்கிறது. ஆசைகளின் எல்லைகள் தானே சுதந்திரம். நம் ஆசைகள் நிறைவேறாத பட்சத்தில், நாம் உண்மையிலேயே சுதந்திரமாய் தான் வாழ்கிறோமா??

அரசர் காலத்தில் சிலர் நீங்கலாக பலர் மனித இனத்தை வஞ்சித்து, கண்டித்து அடிமைகள் போல் நடத்தினர் என்று வரலாறு நமக்கு சொல்கிறது. அரச காலத்தில் மட்டும் தானா. சங்க காலம் தொடங்கி நேற்று வந்த காலம் வரை அரசியல் அங்கீகாரம் இல்லாமல், அரசியல் குறுக்கீடு இல்லாமல் தன் வாழ்க்கையை தன் எண்ணங்களை கொண்டு எத்தனை பேரால் வாழ முடிகிறது.

பொது மக்கள் கூடும் கோவில்களில் கூட பணம் இருந்தால் சிறப்பு தரிசனம் கிடைக்க வழி இருக்கிறது. ஒரு சாமானியனுக்கு பணப் பற்றாகுறையால் அவன் சுதந்திரம் பறிக்க படுகிறது. ஏற்ற தாழ்வுகள் எங்கேயும் எப்போதும் சத்தமே இல்லாமல் எதிரொலிக்கிறது.

ஆயிரம் புரட்சிகள் செய்தாயிற்று. ஆயிரம் தலைவர்கள் வந்து சென்றாயிற்று. என் பாரத நாட்டில் ஊழல்கள் குறைந்த பாடில்லை. பணம் இன்றி பரிசு வாங்க ஏழைக்கு வாய்ப்புகள் கிடைப்பதில்லை. வசதிகள் அவனை இன்னும் சென்றடையவில்லை. யார் இதை தடுப்பது? எதனால் என் சாமானியனுக்கு உரிமைகள் மறுக்கப்படுகிறது?? சுதந்திர இந்தியாவில் ஏன் இத்தனை வேறுபாடு??

ஒரு ஒப்பற்ற சுதந்திரம் என்பது, நேர்மையின் வெளிச்சமாக இருந்திட வேண்டும். கண்ணாடி பெட்டிக்குள் உள்ள பொருட்களை போல வெளிப்படையாக தெரிந்திட வேண்டும். நம் சுதந்திரம் இருட்டு பெட்டிக்குள் அடைத்து வைக்க பட்டிருக்கிறது. வெளியில் இருந்து பார்ப்பவருக்கு

உள்ளே இருக்கும் உண்மை நிலை தெரியாது. வெள்ளையனிடம் இருந்து நாம் பெற்ற சுதந்திரத்தை சில கொள்ளையர்களிடம் பறிகொடுத்து கொண்டே வருகிறோம். அரசியல் தலைவர்கள் கூச்சமே படமால் நம் கண் முன்னே நம்மை ஏமாற்றுவதை தினமும் பார்த்து, பழகி, சிறிது புன்னகைத்து விட்டு மறந்து விடுகிறோம். பல அரசு ஊழியர்களின் அலட்சியத்திற்கு இந்த அரசியல் மண் புழுக்கள் உரமாக உதவுகிறது.

இந்த ஒரு நாளில் நம் சுதந்திரத்தை பற்றி உரை ஆற்றி விட்டால் நம் நாடு மாறி விடுமா?. இல்லை. இந்த ஒரு நாளை திருநாளாக எண்ணி முதல் படி எடுத்து வைப்போம். அறுபது சதவிகிதம் இளைஞர்களை கொண்ட நாட்டில் எங்கே ஊழல் நடக்கிறது என்று ஆராய்ச்சி செய்தால் மீதம் உள்ள நாற்பது சதவிகிதம் கொண்ட மக்களிடம் தான் இருக்க வேண்டும்.

உலகம் முழுவதும் உள்ள உற்பத்தி கேந்திரங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள 1993 ஆம் ஆண்டு உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்தியா உள்ளிட்ட அனைத்து உலக பயன்பெறும் வண்ணம் அந்த அமைப்பு உருவாக்கப்பட்டதாக சொல்லப்பட்டாலும் அது இந்தியாவின் தொழில் வளத்தை சுரண்டுவதற்காக பன்னாட்டு நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு(?) என்று அறியாமல் இந்தியா இந்த உலக வர்த்தக அமைப்பினை ஏற்று கையொப்பம் இட்டு தன்னையும் இணைத்துக் கொண்டது.

அந்த ஒப்பந்தத்தில் அடுத்த ஆண்டுகளில் இந்தியாவைக் குறிவைத்து சில ஒப்பந்த திருத்தங்கள் ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவால் முன்மொழியப்பட்டு இந்தியாவும் ஏற்றுள்ளது.

அந்த வகையில் 1995 ஆம் ஆண்டு உலக வர்த்தக அமைப்பில் அமெரிக்கா விவசாய ஒப்பந்தத்தில் திருத்தம் கேட்டது. இந்த திருத்தம் இந்தியா உள்ளிட்ட ஆஸ்திரேலியா கனடா இந்தோனேசியா உள்ளிட்ட சுமார் 56 நாடுகள் தன குடிமக்களை விவசாயத்தில் இருந்து அடியோடு கைவிட்டு நகர்ப்புற குடியேற்றத்திற்கு வழிவகை செய்வதால் இந்நாடுகள் அனைத்தும் இந்தியாவின் தலைமையில் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தன.



இருப்பினும் நாட்டாமை அமெரிக்கா தனது பொருளாதார உதவி மூலம் பல நாடுகளை தன வழிக்கு அடங்கிப் போக செய்தது. ஆனால் இந்தியாவும் அதன் கீழ் 27 நாடுகள் 2010-2013 ஆம் ஆண்டுவரை ஒப்பந்தம் நிறைவேற விடாமல் கடுமையாக எதிர்த்தன.

இந்நிலையில் இலங்கை பிரச்சனையில் அமெரிக்கா 2013 ஆம் ஆண்டு தலையிட்டு உலக மனித உரிமை ஆணைய விசாரணைக்கும் இலங்கைக்கு எதிரான விசாரணைக்கும் ஐ நா துணையுடன் நாடகமாடியது.

இது முற்றிலும் உலக வர்த்தக அமைப்பின் 2013 ஆம் ஆண்டு மாநாட்டில் இந்தியாவை அடிபணிய வைக்க விவசாய ஒப்பந்தம் எவ்வித திருத்தமும் இல்லாமல் இந்தியாவை கையொப்பம் இட செய்ய, அமெரிக்காவின் தந்திரம் என்று அறியாத இந்திய ஈழத்தமிழ் புரட்சியாளர்களும் போர்குற்ற விசாரணைக்கு மனித உரிமை மீறலுக்காக அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தின.

அன்னியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்ற நாம் இன்று சுதந்திரத்துடன் இருக்கிறோமா என்று கேள்வி எழாமல் இல்லை. நாட்டின் முதுகெலும்பான விவசாயம், அதை கண்போல் காக்கும் விவசாயிகளுக்கு தாங்கள் விளைவித்தப் பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமையில்லை. பெண்களுக்கு பாதுகாப்பில்லை. "நட்ட நடுநிசியில் ஒரு பெண் தன்னந்தனியாக பூட்டிய அணிகலன்களோடு என்றைக்கு பாதுகாப்பாக செல்கிறாரே அன்றுதான் சுதந்திர இந்தியா என்ற சொல்லுக்கு அர்த்தம் இருக்கும் என்பார் காந்தியடிகள். ஆனால் இன்றே பூட்டிய அணிகலன்கள்கூட வேண்டாம். கட்டிய தாலியோடு செல்லும்போதும் நட்ட நிசிகூட வேண்டாம் பட்டப்பகலில் செல்லும்போதே, அவர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பில்லை. கொள்ளையர்களிடமிருந்து பெண்களுக்கு விடுதலைக் கிடைப்பது எப்போது. பாலியல் வன்முறைக்கு குழந்தைகள் கூட தப்ப வில்லையே என்று தணியும் இந்த சுதந்திர தாகம் என்ற பாரதியின் குரலுக்கு இன்னும் விடைகிடைத்த பாடில்லை. இரவில் வாங்கினோம் சுதந்திரம் அதனால் இன்னும் விடியவில்லை என்ற கவிதை பொய்யல்ல. தந்திர அரசியலிருந்து இந்தியா தப்பிப்பது எப்போது?

– ஆர். குணசேகரன்



# கலைஞரின் "வில் பவர்"

நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகில் உள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 ம் வருடம் ஜூன் 3 ம் தேதி அன்று, முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாக கலைஞர் கருணாநிதி பிறந்தார். இவரது இயற்பெயர் தட்சிணாமூர்த்தி ஆகும்.

கலைஞர் தம் பெற்றோருக்கு மூன்றாவது குழந்தை. அவருக்கு முன்பாக பெரியநாயகம், சண்முகசுந்தரம் என இரு சகோதரிகள் உண்டு. சண்முகசுந்தரம் அம்மாளின் மகன்கள்தான் முரசொலி மாறனும் முரசொலி செல்வமும். பெரியநாயகம் அம்மாளின் மகன் அமிர்தம்.

கலைஞரின் முதல் மேடை பேச்சு 'நட்பு' குறித்து. எட்டாம் வகுப்பு மாணவராக இருந்த போது (1939) பள்ளியில் நடந்த பேச்சுப் போட்டியில் 'நட்பு' என்ற தலைப்பில் பேசினார்.

கலைஞர் முதன்முதலில் துவங்கிய பத்திரிகையின் பெயர் மாணவ நேசன். 1941ல் வெளியான மாணவ நேசன் ஒரு மாத இதழ். முதன் முதலில் கலைஞர் தொடங்கிய அமைப்பு தமிழ் மாணவர் மன்றம்.

நீதிக்கட்சியை சேர்ந்த அழகிரிசாமியால் தன் சிறுவயதில் ஈர்க்கப்பட்டு அரசியலுக்கு வந்தவர் கலைஞர். அதன் காரணமாகவே தம் மகனுக்கு அழகிரி என்று பெயர் சூட்டினார். தான் திராவிட சிந்தனையால் ஈர்க்கப்படாமல் இருந்தால் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருப்பேன் என்று ஒரு முறை கலைஞர் கூறினார். எம்.ஜி.ஆருக்கும் கலைஞர்க்கும் நட்பு ஏற்பட்டது சேலம் மாடர்ன் தியேட்டரில்தான்.

மு.க.முத்து, அழகிரி, ஸ்டாலின், செல்வி, தமிழரசு, கனிமொழி ஆகியோர் கலைஞரின் பிள்ளைகள் ஆவார்கள்.

கலைஞர் எழுதி முதன் முதலில் அரங்கேற்றப்பட்ட நாடகம், 'பழனியப்பன்'. திருவாரூர் பேபி டாக்கீஸில் 1944ல் அரங்கற்றப்பட்டது. 50களிலிருந்து 70கள் வரை தமிழ்த் திரையுலகில் கோலோச்சிய சிவாஜி கணேசன், எம்.ஜி. ராமச்சந்திரன் ஆகிய இருவருக்கும் மிகப் பெரிய வெற்றிப்படங்களை அளித்தவர் கலைஞர். சிவாஜிக்கு பராசக்தி, மனோகரா. எம்.ஜி.ஆருக்கு மந்திரி குமாரி,மலைக்கள்ளன் .

கலைஞர் முதன் முதலில் வசனம் எழுதிய திரைப்படம் 1947ல் வெளியான ராஜகுமாரி. இந்தப் படம்தான் முதன் முதலில் எம்.ஜி.ஆர் முன்னணி வேடத்தில் நடித்த படம்.

1947ல் வெளியான ராஜகுமாரி தொடங்கி, 2011ல் வெளியான பொன்னர் சங்கர் வரை சுமார் 64 வருடங்கள் திரையுலகில் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் என பல்வேறு துறைகளிலும் பணியாற்றியிருக்கிறார் கலைஞர்.

பராசக்தி படம் வெளிவந்தபோது, அந்தப் படத்தை கிண்டல் செய்து ஒரு இதழில் பரப்பிரம்மம் என்ற பெயரில் கார்ட்டூன் வெளியிடவே, அதே பெயரில் ஒரு நாடகத்தை எழுதி மாநிலம் முழுவதும் நடத்தினார் கலைஞர்.

கலைஞர் கடைசியாக வசனம் எழுதிய தொடர் கலைஞர் தொலைக்காட்சியில் வெளியான ஸ்ரீ ராமானுஜர் மதத்தில் புரட்சி செய்த மகான். அந்தத் தொடருக்கு அவர் எழுத ஆரம்பித்தபோது அவரது வயது 92. எழுதிவந்தபோதே அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது.

கலைஞர் பத்து சமூக நாவல்களையும் 6 சரித்திர நாவல்களையும் எழுதியிருக்கிறார். 21 நாடகங்களை கலைஞர் எழுதியிருக்கிறார். 1957ல் தி.மு.கவுக்குக் கிடைத்த உதயசூரியன் சின்னத்தைப் பிரபலபடுத்துவதற்காக உதயசூரியன் என்ற நாடகத்தை எழுதினார். இனியவை 20 என்ற பெயரில் பயண நூல் ஒன்றையும் கலைஞர் எழுதியிருக்கிறார். கலைஞர் பணியாற்றிய படங்களின் எண்ணிக்கை 69. கலைஞர் கதை

வசனம் எழுதி எம்.ஜி.ஆர். நடித்த படங்களின் எண்ணிக்கை 9. கலைஞரை ஆரம்பகாலத்தில் எம்.ஜி.ஆர் 'ஆண்டவரே' என்று அழைத்திருக்கிறார்.

கலைஞரின் உதவியாளர் சண்முகநாதன், 1969ல் கலைஞரிடம் பணியில் சேர்ந்தவர். கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக உதவியாளராக இருந்துவருகிறார்.

கலைஞரிக்கு 'கலைஞர்' என்ற அடைமொழியை வழங்கியது நடிகவேள் எம்.ஆர்.ராதா தான். கலைஞர் எழுதிய, 'தூக்குமேடை' என்ற நாடகத்தை பார்த்து இந்த பட்டத்தை வழங்கினார்.

இதுவரை 13 சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டிருக்கும் கலைஞர், இதுவரை ஒரு தேர்தலில்கூட தோல்வியடைந்ததில்லை.

சட்டசபை விவாதங்களிலும் எப்போதும் சிறப்பாக செயல்பட கூடியவர் கலைஞர். ஒரு முறை, "தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கருவறைக்குள் செல்ல உரிமை இல்லையே" என்று பேசிக் கொண்டிருந்த கலைஞரைப் பார்த்து, "கோயிலுக்கே போகாத கலைஞருக்கு இதுபற்றி எதற்குக் கவலை?" என்றார் இந்திய தேசிய காங்கிரஸை சேர்ந்த டி.என். அனந்தநாயகி. "கொலை செய்தவர்கள் மட்டுமா கோர்ட்டுக்குப் போகிறார்கள். வாதாடுபவர்களும் தானே போக வேண்டும்?" என்றவர் கலைஞர்.

கலைஞர் முதன்முறையாக சட்டமன்றத்தில் பேசிவிட்டு அமர்ந்ததும், அப்போது சட்டப்பேரவை தலைவராக இருந்த யு. கிருஷ்ணாராவ் ஒரு காகிதத்தில், 'Very Good Speech' என்று எழுதி கொடுத்தார்.

1974க்கு முன்பாக முதலமைச்சர்கள் சுதந்திர தினம், குடியரசு தினங்களில் கொடியேற்ற முடியாது. ஆளுனர்தான் அதைச் செய்வார். 1974ல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியிடம் இது குறித்துப் பேசிய கலைஞர், முதல்வர்கள் சுதந்திர தினத்தன்று கொடியேற்றும் வழக்கத்தை உருவாக்கினார். 1974 ஆகஸ்ட் 15ஆம் தேதி புனித ஜார்ஜ் கோட்டையில் கொடியேற்றிய கலைஞர், சுதந்திர தினத்தன்று கொடியேற்றிய முதல் முதலமைச்சர்.

**சோதனைகள் வந்தபோதெல்லாம் அதை எதிர்கொள்ளும் 'வில் பவர்' கலைஞரிடம் இருந்தது. சமீபத்தில் உடல்நலம் குன்றி மரணத்தின் எல்லை வரை சென்று மீண்டும் பீனிக்ஸ் பறவைபோல் எழுந்து அனைவரையும் நெகிழ்ச்சிக்கு ஆளாக்கியிருக்கிறார்.**

மனிதர்களை மனிதர்களே இழுத்துச் செல்லும் கை ரிக்ஷா வழக்கம் இந்தியாவின் சில மாநிலங்களில் இன்னும் உள்ள நிலையில், 1973லேயே தமிழகத்தில் அதைத் தடை செய்தார்.

1953ல் திருப்பத்தூரில் நடந்த கார் விபத்தில்தான் கலைஞர்யின் இடது கண் பார்வை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அடுத்தடுத்த விபத்துகளிலும் அதே கண்ணில் அடிபட்டது. அண்ணா மறைவுக்குப் பிறகு முதல்வரான போதுதான் "உடன்பிறப்பே" என முரசொலியில் கடிதம் எழுதத் துவங்கினார் கலைஞர். 1971 முதல் "உயிரினும் மேலான உடன்பிறப்பே" என்று பேசவும் துவங்கினார். "உடன் பிறப்பே" என்ற கடிதத் தொடர், உலகின் நீண்ட தொடர்களில் ஒன்று. முரசொலி துவங்கியதிலிருந்து, 2016ல் உடல்நலம் குன்றும்வரை இதனை எழுதிவந்தார் கலைஞர். உடன்பிறப்பே என விளித்து கலைஞர் எழுதிய கடிதங்களின் எண்ணிக்கை 7,000க்கும் மேல்.

`சங்கத்தமிழ்', `தொல்காப்பிய உரை', `இனியவை இருபது', `கலைஞரின் கவிதை மழை',உட்பட 150 க்கும் மேலான நூல்களை கலைஞர் எழுதியிருக்கிறார்.

உடன்பிறப்புகளுக்கு இவர் எழுதிய கடிதங்கள் தொகுக்கப்பட்டு 12 தொகுதிகளாக வெளியிடப் பட்டுள்ளன. முதல்வராக இருக்கும்போதும், இல்லாதபோதும் அதிகாலையிலேயே பத்திரிகைகளைப் படித்துவிட்டு, சம்பந்தப்பட்ட வர்களுக்கு தொலைபேசியில் பேசுவது கலைஞரின் வழக்கம்.

'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில் தன் வாழ்க்கை வரலாற்றை முரசொலி மற்றும் குங்குமம் இதழில் எழுதினார் கலைஞர்.

ஒரு சினிமா வசனகர்த்தாவாக கலைஞர்யை உச்சத்திற்கு கொண்டு சென்றது 'பராசக்தி` திரைப்படம்தான். இத்திரைப்படம் வசனத்திற் காகவே திரும்ப திரும்ப பார்க்கப்பட்டது.

கல்லக்குடி போராட்டம்தான் அவரை அரசியல் தளத்தில் முக்கிய தலைவராக பரிணமிக்க செய்தது. இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, கல்லக்குடியில் ரயில் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்து, ரயில் மறியலில் இறங்கினார்.

சென்னையின் மிகப் பிரபலமான ஜெமினி மேம்பாலம் எனப்படும் அண்ணா மேம்பாலம் கலைஞர் ஆட்சிக் காலத்தில் 21 மாதங்களில் கட்டப்பட்டு, 1973 ஜூலை 1ஆம் தேதி போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது. அந்த காலகட்டத்தில் நாட்டிலேயே இம்மாதிரி கட்டப்பட்ட மூன்றாவது பாலம் அது.

தன் மூளையே தனக்கு டைரி என்பார் கலைஞர். அந்தளவுக்கு ஞாபக சக்தி கொண்டவர் அவர்.

பேரறிஞர் அண்ணாவின் முதலாவது நினைவு நாளின்போது, மத்திய அரசு அவரது புகைப்படத்துடன் தபால் தலை வெளியிட விரும்பியபோது, அவரது கையெழுத்தையும் அந்த புகைப்படத்தின் மீது இடம்பெறச் செய்தார் அப்போது முதல்வராக இருந்தார் கலைஞர். "அப்போதுதான் தமிழ் எழுத்துகள் அந்த தபால்தலையில் இருக்கும்" என்றார்.

மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய "நீராடும் கடலுடுத்த" பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக அரசு விழாக்களில் பாடும் வழக்கத்தை 1970ல் கலைஞர் ஏற்படுத்தினார். முதன் முதலாக திரைப்பட விருது வழங்கும் விழாவில் இந்தப் பாடல் பாடப்பட்டது.

சென்னை தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் கருவூலத்தில், கலைஞர் குறித்த அனைத்து தகவல்களும் தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர்களில் அதிக அளவில் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணங்களை மேற்கொண்டவர் கலைஞர். அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர் பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்.

எம்.ஜி.ஆருக்கு புரட்சி நடிகர் என்ற பட்டத்தைக் கொடுத்தது கலைஞர்தான்.

சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்திற்கு காரணகர்த்தாவாக இருந்தது கலைஞர்தான். ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான



சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியதும் கலைஞர்தான்.

1959ஆம் ஆண்டு நடந்த சென்னை மாநகராட்சித் தேர்தலில் 100ல் 45 இடங்களைப் பிடித்தது தி.மு.க. இதற்காக மோதிரம் ஒன்றை கலைஞர்க்கு பரிசளித்தார் பேரறிஞர் அண்ணா.

1967ல் முதன் முதலில் பேரறிஞர் அண்ணா முதல்வரானபோது, அண்ணா, நெடுஞ்சழியன் ஆகியோருக்குப் பிறகு அமைச்சரவையில் மூன்றாவது இடத்தில் பொதுப்பணித்துறை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

நெருக்கடி நிலை காலகட்டத்தில் பத்திரிகைகளுக்கு தணிக்கை முறை அமலில் இருந்ததால், கைதுசெய்யப்பட்ட தி.மு.கவினரின் பட்டியலை வெளியிட யுக்தி ஒன்றைக் கடைப்பிடித்தார் கலைஞர். 1976 பிப்ரவரி 3ஆம் தேதி அண்ணா நினைவு நாளன்று அண்ணா சதுக்கத்திற்கு மலர் வளையம் வைக்க வர இயலாதோர் பட்டியல் என்று ஒரு பட்டியலை வெளியிட்டார். அதில் மாவட்டவாரியாக கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர் இடம்பெற்றிருந்தது.

உடல்நலம் நன்றாக இருந்தவரை, காலை 4.30 மணிக்கு எழுந்து, எல்லாப் பத்திரிகைகளையும் படித்துவிடும் பழக்கம் கொண்டவர் கலைஞர். சில சமயங்களில் சம்பந்தப்பட்ட பத்திரிகை அலுவலகங்களுக்கும் அதிகாலையிலேயே அழைத்துப் பேசுவார்.

கலைஞரை மிகவும் பாதித்த மரணங்களில் முரசொலி மாறனின் மரணம் முக்கியமானது. "அவனுக்கு முன்னாடி நான் போயிருக்கனும்" என்று கலைஞர் அடிக்கடி கூறுவதாக அவரது உதவியாளர் சண்முகநாதன் சொல்கிறார்.

தமிழ் ஆண்டு வரிசைக்கு திருவள்ளுவர் ஆண்டு என்ற பெயரை அளித்தவர் கலைஞர்தான்.

நேரம் தவறாமை கலைஞரின் முக்கியப் பண்புகளில் ஒன்று. எந்த ஒரு நிகழ்வுக்கும் குறித்த நேரத்திற்கு முன்பே வந்துவிடுவார் கலைஞர்.

கலைஞர் செயல்படுத்திய திட்டங்களில் அவருக்கு மிகவும் பிடித்த திட்டங்களில் ஒன்று பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம். 1998ல் மதுரை மாவட்டம் மேலக்கோட்டையில் முதல் சமத்துவபுரம் துவங்கப்பட்டது. 237 சமத்துவபுரங்கள் தமிழகத்தில் அமைக்கப்பட்டன. இதில் தலித்துகளுக்கு 40 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டன.

ராஜாஜியில் துவங்கி, டி பிரகாசம், ஓ.பி. ராமசாமி ரெட்டியார், பி.எஸ். குமாரசாமி ராஜா, காமராஜர், பக்தவத்சலம், பேரறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜானகி ராமச்சந்திரன், ஜெயலலிதா, ஓ. பன்னீர்செல்வம் என 11 முதல்வர்களின் ஆட்சிக்காலத்தில் அரசியல் செய்திருக்கிறார் கலைஞர். கலைஞர் தலைவராக இருந்த காலத்தில் இரு முறை கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டது. முதல் முறை எம்.ஜி.ஆரால். இரண்டாவது முறை வைகோவால். இரு முறையும் கட்சியை மீட்டெடுத்தார் கலைஞர்.

ஆட்சிப்பொறுப்பு கிடைக்கும்போதெல்லாம் மக்களுக்கு தேவையாக திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார். எதிர்க்கட்சியாக இருந்தபோது ஆளுங்கட்சிக்கு எதிராக போராட்டம் நடத்துவதும் தவறுகளை சுட்டிக்காட்டுவதும் என வெகு சிறப்பாக செயல்பட்டிருக்கிறார்.

சோதனைகள் வந்தபோதெல்லாம் அதை எதிர்கொள்ளும் 'வில் பவர்' கலைஞரிடம் இருந்தது. சமீபத்தில் உடல்நலம் குன்றி மரணத்தின் எல்லை வரை சென்று மீண்டும் பீனிக்ஸ் பறவைபோல் எழுந்து அனைவரையும் நெகிழ்ச்சிக்கு ஆளாக்கியிருக்கிறார்.

சாதிப்பதிலும் உழைப்பதிலும் அவர் கொண்ட உறுதி வளரத்துடிக்கும் இளைஞர்களுக்கு ஒரு பாடம். இளைஞர் மட்டுமல்ல, மூத்தவர்களுக்கும் அவர்தான் முன்னோடி.

**– கி. விடாரண்யம்**


# Be prepared to change



In 1998, Kodak employed 1,70,000 employees and sold 85% of the world's photo papers. Within the last few years, digital photography made them out of the market. Kodak went bankrupt and all his staff came on the road. HMT (clock), BAJAJ (scooter)

DYANORA (TV), MURPHY (radio), NOKIA (Mobile), RAJDOOT (bike), AMBASSADOR (car). Friends, There was no shortage of quality at all, yet they were out of the market Reason??? They have not changed over time. You have an idea that in the coming 10 years, the world will change completely and 70 to 90% of the people running today will be closed.

Welcome to the 4th Industrial Revolution. Uber is just software. He does not have a single car of his own, despite this he is the world's largest taxi company. Airbnb is the world's largest hotel company, while they do not have a single hotel of their own. There are many examples like Paytm, ola cabs, Oyo rooms. There is no work left for young lawyers in the US now because the software named IBM Watson gives better legal advice throughout the moment. In the next 10 years, 90% of Americans will become unemployed who will save 10% they will be Super Specialists. The software named Watson is diagnosed with 4x Accuracy of Cancer compared to humans. By 2030 the computer will be more intelligent than humans. By 2018, Driverless cars will land on the roads. By 2020, this single invention will start to change the whole world. 90% cars will disappear from the streets of the world in the next 10 years ... Those who will survive will either have electric cars or hybrid roads will be empty, consumption of petrol will decrease by 90%, all Arab countries will become bankrupt .You will request a car from a software like Uber and in a few moments, a driverless car will be parked at your door . if you share it with someone, that ride will be cheaper than your bike.



Due to being a driverless of cars, 99% of accidents will stop. This will stop the business of Car Insurance. No employment like a driver will survive on earth. When 90% cars will disappear from cities and roads, problems like Traffic and Parking will end automatically. because a car will be equal to 20 cars today. From today 5 or 10 years ago, there was no such place where there is no PCO. When the mobile phone arrived, the PCOs had to shut down. The PCO people started selling the mobile phones. Now the recharge is also going online. Have you ever noticed? Today, every third store in the market is a mobile phone store which does Sale, service and maintenance of phones and it's accessories.

Almost all payments are done by Paytm today. People have started booking railway tickets with their phones. The transaction of money is also changing. Currency Note was replaced by Plastic Money and now it's Digital. Hence Every Person should continue to make changes in his business or his / her way of working and should also change his / her nature over time for Good. "Keep Updating / Upgrading Your Skills and Knowledge with Time" The world is changing very fast. Keep your eyes and ears open or else you will lose. Be prepared to change with time Run with time and Be Successful.

**- G.Rammohan**



# பாசத்தை மீட்போம்!

சிறு வயதில் படிப்பில் மூழ்கிக்கிடக்கும் சூழலில் பின்பு படித்து வேலைக்கு போகும் சமயத்தில் இன்றைய இளைய தலைமுறையினர் டி.வி.கிரிக்கெட், வீடியோ கேம், செல்போனில் வாட்அப், பேஸ்புக் என என அதிலேயே மூழ்கிக்கிடக்கின்றனர். தன்னை சுற்றி உள்ள ரத்த சொந்தங்களையும் உறவுகளையும் அக்கப்பக்கத்தினரை பற்றியும் கொஞ்சம் கூட சிந்தனை இல்லாமல் அன்பு பாராட்டும் வழக்கமின்றி ஏதோ இயல்பற்று ஹாய், ஹாலோ சொல்வதுமாக போய்க்கொண்டிருக்கிறது.

நத்தையைப்போல் நகர்ந்து ஊரும் வாழ்வின் நாட்களில், பிடிமானமாய் விளங்குவது உறவு. தளர்வு மனதை ஆட்கொள்ளும்போதெல்லாம் ஊக்கம் அளிப்பது உறவு. உறவில்லாத ஒரு தனிமர வாழ்வை நினைத்துக்கூடப் பார்க்க இயலாது மனித சமுதாயத்தால். அந்த அளவு நாம் அனைவரும் உறவெனும் சங்கிலியினுள் பிணையுண்டு கிடக்கிறோம்.

உறவு என்று இங்கே அர்த்தப்படுத்துவது, குடும்ப உறவுகளை, அதாவது பிறப்பால் உண்டான உறவுகளை மட்டும் அல்ல. நாம் அறிந்த மனிதர்களுள், நாம், நம்மைப் பகிர்ந்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு உயிருமே உறவுதான். ரத்த சம்பந்தம் இருந்தால் மட்டுமே உறவென்று பொருள் கொள்ள வேண்டியதில்லை. சொல்லப்போனால், குடும்பத்துக்குள் பகிர்ந்து கொள்ள முடியாத பல விஷயங்களையும் நட்பில் பகிர்ந்து கொண்டு, ஆறுதலோ, தெளிவோ, வேறு எது வேண்டுமோ அதைப்பெற முடியும்.

பெற்றோரையோ, உடன் பிறந்தோரையோ, நாம் தெரிவு செய்து கொள்ள இயலாது. ஆனால் நட்பில் இந்த வசதி உண்டு. இந்தத் தெரிவை சரியாக செய்யக் கற்றுக்கொண்டால், வாழ்வும், உறவும் துலங்கும். இல்லையேல், நட்பே வாழ்வைக் கெடுக்கும். அங்கே உறவென்ற வார்த்தைக்கெல்லாம் இடம் இல்லை.

சரி, காலத்துக்கும் கூட வரும் உறவைக் கண்டு கொள்வது எப்படி? மனிதர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே, அவரோடு நல்லதொரு உறவு அமையுமா என்று அறிந்துகொள்வது சாத்தியமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை தேட வேண்டிய அவசியமே இல்லை. நாம், நாமாக இருந்து விட்டாலே, நமக்கான உறவுகள், நம்மை வந்து சேரும்.

மிகச்சாதாரணமாகப் பழகும் இருவர், எப்போது நட்பென்ற எல்லை கடந்து, உறவென்ற ஊர் சேர்கிறார்கள் என்பது எவராலும் அறிந்து கொள்ள முடியாத ரகசியம். அது அவர்கள் அறிமுகமான சமீபத்திலேயே நிகழலாம். இல்லை மாதங்களோ, வருடங்களோ கூட ஆகலாம். காலம் தன் கையில் வைத்திருக்கும் கணக்கு நோட்டில் தீர்மானிக்கப்படுவது அது. ஒரு வேளை நீண்ட காலம் கழித்து மனதால் ஒன்றும்போது, இத்துணை காலத்தை வீணடித்துவிட்டோமே என்று வருந்துவதைக் காட்டிலும், இப்போதாவது காலம் அதன் திரையை விலக்கியதே என்று சந்தோஷப்படுவதே உத்தமம்.

இப்படி மனதால் ஒன்றி விட்ட உறவுகளுக்குள் விரிசல் வராமல் பார்த்துக்கொள்வது அவரவர் சாமர்த்தியமே. ஏனென்றால், கருத்து வேறுபாடும், அதையொட்டி வரக்கூடிய வாதப் பிரதிவாதங்களும் உறவுகளுக்குள் மிக இயல்பானவை. நெருக்கம் கூடும் அளவுக்கு உரையாடும் மற்றும் உடனிருக்கும்

நேரமும் அதிகரிக்கும் அல்லவா. கூடவே பிரச்சினைகள் வரக்கூடிய வாய்ப்புகளும் அதிகரிக்கத்தானே செய்யும். இத்தகைய தருணங்களையும் தாண்டி, கூடவே வரும் உறவுகளைப் பெற, ஒருமித்த புரிந்துகொள்ளுதல் மிக அவசியம். சிலரைக் கேட்டால், பெறாமல், பெற்ற உறவுகளிடம், வெறுமனே கருத்தை நிரூபித்து, சூழ்நிலையை வெற்றி கொள்வதற்காக விவாதிப்பதை விட, உறவின் முக்கியத்துவத்தை காப்பதற்காக விட்டுக்கொடுத்துவிடுவதே உசிதம் என்பார்கள்.

இன்னொருபுறம், "இல்லை.. இல்லை.. என்னதான் வாதம் செய்தாலும், கருத்தின் பொருட்டு பிரயத்தனங்களே நிகழ்ந்தாலும், நாங்கள், நாங்களாகவேதான் இருப்போம். அதில் விட்டுக்கொடுக்க தேவை இல்லை. நான் நேசிப்பவரின் கருத்து தவறென்றால், இடித்துரைப்பது என் பொறுப்புதானே.." என்கிறீர்களா? அதுவும் சரிதான். உறவில் விரிசல் வேண்டாம் என்பதற்காக விட்டுக்கொடுத்தலும் அழகுதான். திருத்தியே தீருவேன் என்ற தீர்மானமும் அழகுதான்..!

நமக்கு ஒருவர் முக்கியம் என்ற நிலை வந்த உடனேயே, எவ்வளவு முக்கியம் என்ற கேள்வியும் பின்தொடர்கிறது. அதற்கு பதில் "எனக்கு மட்டும்தான் முக்கியம்" என்ற நிலைதானென்று மனது, தன்னை அறியாமலேயே நம்பத்தொடங்குகிறது. பாசம், நேசம் போன்ற வார்த்தைகளை எல்லாம் பிரயோகப்படுத்தும் உறவுகளிடமும், உரிமைத்தனம் இல்லாமல் பழகுவதற்கு உண்மையாகவே பக்குவப்பட்ட மனம் வேண்டும்.

எனக்கு முக்கியமான ஒருவருக்கு நான் முக்கியமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுதான். ஆனால், நான் மட்டுமே முக்கியமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கத் தொடங்கும் புள்ளியில்தான் விரிசலுக்கு வித்திடுகிறோம்.

எனக்கு ஏன் செய்யவில்லை என்று நான் கேட்கலாம். தவறில்லை. எனக்கு யாரென்றே தெரியாத ஒருவருக்கு ஏன் செய்கிறாய் என்று நான் கேட்கலாமா? கூடாது என்ற உண்மை பலருக்கும், பட்டுத் தெளிந்த பின்தான் புரிகிறது என்பதே கண்கூடு. உண்மை புரியும் வரை, அந்த உறவோடு சம்பந்தப்பட்டவர்கள் யாவருக்குமே நிம்மதி இருக்காது. இந்த அவஸ்தை எல்லாம் படாமலே உண்மை புரியும் அளவு பக்குவப்பட்டிருந்தால், பாராட்டப்பட வேண்டியது அவசியம்.

ஒரு காலகட்டத்தில் என்னை நேசிக்க ஆரம்பித்த ஒருவர், அவர் வாழ்வில், மேலும் எத்தனையோ பேரைச் சந்திக்க வேண்டியிருக்கும். பழக வேண்டியிருக்கும். என்றோ, எப்போதோ, என்னுடன் பழகி, என்னை நேசிக்க ஆரம்பித்த பாவத்துக்காக வேறு யாரையுமே அவர் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற எண்ணம் காட்டுமிராண்டித்தனமில்லையா? இதற்காக நேசிப்பவர்களின் மீதே தன் கருத்தை, வலுக்கட்டாயமாகத் திணிக்கத் துணிதலும், அது மறுக்கப்படும் பட்சத்தில், உறவே வேண்டாமென்று உதறும் அளவுக்கு, கண்மூடச் செய்துவிடலும் உரிமைத்தனத்தின் சிறப்பியல்புகள்.

எனக்குப் பிடித்தமானவருக்கு, எனக்கு பிடித்தவைகள்தான் பிடிக்க வேண்டும், எனக்குப் பிடிக்காதவைகள், பிடித்தமானவைகளாக இருக்கக்கூடாது என்ற எண்ணமும் உரிமைத்தனத்தின் ஒரு பரிமாணம். எனக்கு எப்படி வேண்டுமோ, அப்படியெல்லாம் ஆட்டுவிப்பதற்கு, அவர் என்ன களிமண்ணா? அவரும் சக மனிதர்தானே. மேலும், நாம் நேசிக்கும் ஒருவரை, அவருடைய இயல்புகளை, உள்ளது உள்ளவாறே ஏற்றுக்கொள்வதுதான் அந்த உறவுக்கு நாம் கொடுக்கும் மதிப்பாக இருக்க முடியும்? ஆக, உறவுக்குள், தனிப்பட்ட சுதந்திரம் என்பது, தேவையான ஒன்று.

நான் ஒருவரிடத்தில் ஏற்படுத்திய தாக்கம் (Impact), அல்லது என்மேலான அவருடைய பாசம், என்னுடைய தனித்தன்மைக்கான அடையாளமாகக் (Symbol of my individuality) கருதப்பட வேண்டுமே தவிர, இன்னொருவர் மீது அவர் கொண்ட ஈடுபாடு, எந்த விதத்திலும் என் மீது கொண்டிருக்கும் பாசத்தைப் பாதிக்காது என்ற உண்மை விளங்கினால் கொண்டிருக்கும் உறவுக்கு நல்லது.

இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் இடமளிக்காமல், நேசிப்பவர்கள் எங்கு சென்றாலும், எத்தனை காலம் பார்க்காதிருந்தாலும், பேசாதிருந்தாலும், நமக்கான அந்த நேசத்தின் ஆழம், குறையவே குறையாது என்ற நம்பிக்கை இருந்துவிட்டால், உறவின் அழகு என்றைக்கும் குன்றாதிருக்கும்.

உறவுக்குள் பிரச்சினைகளைத் தவிர்க்க விழைந்தால், முதலில் எதிர்பார்த்தலைக் குறைக்க வேண்டும். குறைக்க முயற்சித்தலில் ஆரம்பித்து, எதிர்பார்த்தல் என்பதே இல்லாத நிலைதனை அடைய வேண்டும். ஆனால் இது ஒன்றும் அவ்வளவு எளிதானது அல்ல என்பதே நடைமுறை உண்மையாக இருக்கிறது. எதிர்பார்ப்பு ஒரு கிருமி. எதிர்பார்த்தது நடக்கும்போது, சந்தோஷப்படும் மனது, அதுவே ஏமாற்றமாகும்போது விரக்தியடைகிறது (Depression). விரக்தியின் அடர்த்தி அதிகரித்து, மன அழுத்தம், கோபம் என்று பல வடிவங்களில் வெடித்து, வெளிப்படுகிறது. எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முடியாமைக்கு என்னதான் நியாயமான காரணமாக இருந்தாலும், அந்தக் கற்பிதத்தைக் காது கொடுத்துக் கேட்கவும் தயாராக இருப்பதில்லை மனது.

எதிர்பார்த்ததையெல்லாம் ஈடு செய்யும் வரைதான் நான் நேசிப்பேன், இல்லையென்றால் யோசிப்பேன் என்ற கூற்றில், சுயநலத்தைத் தவிர வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. நான் ஒன்றை எதிர்பார்த்து, அதை எனக்காக, நான் விரும்பும் ஒருவர் செய்தால், சந்தோஷம்தான். பாசத்தை மீட்போம்! பகுத்தறிவை வளர்ப்போம்! பண்பாட்டை மீட்போம்!

**- எம்.எஸ்.மூர்த்தி**



# எக்காலத்திற்கும் பொருந்தும் கண்ணதாசன் பாடல்கள்

உலக வாழ்க்கை நிலையில்லை என்பதை வள்ளுவர் முதல் பட்டினத்தார் வரை பிரமாதமாகச் சொல்லி இருக்கிறார்கள்.

செத்தவரைச் சுற்றிச் சுற்றமும் நட்பும் அழுது புலம்புவது இயற்கை. ஆனால் அதை தத்துவ நோக்கில் பார்த்து மனதைத் தேற்றிக் கொள்பவர் எத்தனை பேர்?

இந்த வகையில் தான் கண்ணதாசனின் போனால் போகட்டும் போடா பாடல் மாறு படுகிறது.

இந்தப் பாடல் பிறந்த கதை பற்றி வேறுபட்ட கருத்துக்களைப் பார்க்க முடிகிறது.

மெல்லிசை மன்னர் விசுவநாதன் கண்ணதாசனின் அத்யந்த நண்பர். அவருடன் நெடுங்காலம் பழகியவர்.

அவர் கூறுவது இது:

"ஒரு சமயம் ஒரு படத்திற்காகப் பாடல் 'ரிகார்டிங்' செய்து கொண்டிருந்த போது, ஒரு துக்கமான செய்தி வந்தது. என் இசைக் குழுவிலிருந்த ஒருவரை நாய் கடித்திருந்தது. அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நாய் விஷம் ஏறி நாய் போலவே ஊளையிட்டு அன்றைய தினம் இறந்து விட்டார் என்பதே அந்த சோகச் செய்தி. அந்தப் பாடல் தான் 'பாலும் பழமும்' படத்தில் வரும் 'போனால் போகட்டும் போடா, இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா!' என்பது. அதிலிருந்து அடிக்கடி கவிஞரிடம் சொல்வது,' அவச்சொல் வருகிற மாதிரிப் பாட்டே வேணாம்ணே! உங்க வாயிலிருந்து அந்த மாதிரி வார்த்தைகளே வரவேண்டாம்ணே!"

கண்ணதாசனின் உடனிருந்த இராம.முத்தையா கூறும் செய்தியோ வேறு விதமானது. அவர் கூறுவது:

"ஒரு சமயம் கவிஞர் 'ஆஸ்டின்' கார் ஒன்றை, 8000 ரூபாய்க்கு விலை பேசி, 1500 ரூபாய் முன்பணம் கொடுத்திருந்தார். அதை எடுத்து அன்றைய தினமே வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர்ப் பொதுக்கூட்டத்திற்குச் சென்றார். போகும் வழியில் டிரைவர் ஓட்டிய வழியில் கார் செல்லாமல், ஏதோ ஒரு பக்கம் இழுத்துக் கொண்டே சென்றிருக்கிறது. உடனே கவிஞர் பயந்து போய், டிரைவரை நிறுத்தச் சொல்லி விட்டு, இறங்கி விபரம் கேட்டார். 'சேஸிஸ் பெண்டாகி இருக்கிறது' என்றார் டிரைவர்.

"காரை லாரியில் கட்டி இழுத்துக் கொண்டு, சென்னைக்குப் போ" என்று டிரைவரிடம் சொல்லி விட்டு, அங்கிருந்து ஒரு டாக்ஸியில் ஏறிக் கூட்டத்திற்குப் போய்விட்டுத் திரும்பி வந்தார். மறுநாளே காரை வாங்கியவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடு – என்றார் என்னிடம்.

"நாம் கொடுத்த முன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க மாட்டார்களே!" என்றேன் நான்.

"போனால் போகட்டும் போடா! நான் பிழைத்து வந்ததே பெரிய காரியம்!" என்றார்.

அன்றைய தினம் எழுதிய பாடல் தான், பாலும் பழமும் என்ற படத்தில் வருகிற போனால் போகட்டும் போடா!

இப்படி ஏற்படுகிற ஒவ்வொரு நிகழ்ச்சியும், சூழ்நிலையும் கவிஞருக்குப் பாடலுக்குக் கருத்தாக வந்தமையும்."

**போனால் போகட்டும் போடா; இந்த**
**பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?**
**போனால் போகட்டும் போடா.**
**ஓஹோஹோ ... ஓஹோஹோ**

**வந்தது தெரியும் போவது எங்கே**
**வாசல் நமக்கே தெரியாது!**
**வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் இந்த**
**மண்ணில் நமக்கே இடமேது?**

**வாழ்க்கை என்பது வியாபாரம்; வரும்**
**ஜனனம் என்பது வரவாகும்; அதில்**
**மரணம் என்பது செலவாகும்**
**போனால் போகட்டும் போடா.**

**இரவல் தந்தவன் கேட்கின்றான் ; அதை**
**இல்லை என்றால் அவன் விடுவானா?**
**உறவைச் சொல்லி அழுவதனாலே**
**உயிரை மீண்டும் தருவானா?**

**கூக்குரலாலே கிடைக்காது; இது**
**கோர்ட்டுக்கு போனால் ஜெயிக்காது; அந்த**
**கோட்டையில் நுழைந்தால் திரும்பாது**
**போனால் போகட்டும் போடா!**

**ஓஹோஹோ ஓஹோஹோ**
**எலும்புக்கும் சதைக்கும் மருத்துவம் கண்டேன்**
**இதற்கொரு மருத்துவம் கண்டேனா?**
**இருந்தால் அவளைத் தன்னந் தனியே**
**எரியும் நெருப்பில் விடுவேனா?**
**நமக்கும் மேலே ஒருவனடா - அவன்**
**நாலும் தெரிந்த தலைவனடா! -தினம்**
**நாடகமாடும் கலைஞனடா!**
**போனால் போகட்டும் போடா!**

போனால் போகட்டும் போடா என்கிறார். இரவல் தந்தவன் கேட்கின்றான் அதை இல்லை என்றால் அவன் விடுவானா? கூக்குரலாலே கிடைக்காது; இது கோர்ட்டுக்கு போனால் ஜெயிக்காது; அந்தகோட்டையில் நுழைந்தால் திரும்பாது!

போனால் போகட்டும் போடா! என்கிறார். ஜனன மரணக் கணக்கை ஒரே பாராவில் தந்து விடுகிறார். வாழ்க்கை என்பது வியாபாரம்; வரும் ஜனனம் என்பது வரவாகும்; அதில் மரணம் என்பது செலவாகும் - அவ்வளவு தான்! போனால் போகட்டும் போடா!!

பாட்டில் வரும் தலைவன் டாக்டர். அவனால் உயிரை போகாமல் இருப்பதற்கு மருந்து கண்டுபிடிக்க முடியவில்லை. நமக்கும் மேலே ஒருவனடா, அவன் நாலும் தெரிந்த தலைவனடா, தினம் நாடகமாடும் கலைஞனடா என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொள்கிறான். இறை தத்துவம் இப்படி விளக்கப்படுகிறது!



அருமையான வரிகளில் பெரும் தத்துவத்தை அனாயாசமாக அள்ளித் தந்து விட்டார் கவிஞர்.

அந்த வகையில் இந்தப் பாடல் புகழ் பெற்றதோடு அடிக்கடி அனைவரும் உபயோகப்படுத்தும் போனால் போகட்டும் போடா சொற்றொடரையும் கொண்டிருக்கிறது. டி.எம்.சௌந்தரராஜன் குரலில் சிவாஜிகணேசனின் நடிப்பில் விசுவநாதன் ராமமூர்த்தி இசையமைப்பில் பீம்சிங் இயக்கத்தில் 1961ஆம் ஆண்டு வெளி வந்த பாடல்!

இன்றைக்கு நமக்கு ஏதேனும் ஒரு துன்பம் வந்தால் இந்த வரிகளை திரும்பத்திரும்ப சொன்னால் வந்த துன்பம் திரும்பிப் போக வாய்ப்புண்டு.

கண்ணதாசனின் பாடல்வரிகளின் பொருள் எக்காலத்திற்கும் பொருந்தும்.

**- ப. பத்ரி**



# கபாலிகான் நியூஸ்



**கலங்கிய கண்களோடு வந்தமர்ந்தார் கபாலிகான். காவேரி மருத்துவ மனைக்குத்தான் போய் வந்திருப்பார் என்று யூகித்துக் கொண்டு நாம் தண்ணீர் பாட்டிலை எடுத்து நீட்டினோம். குடித்து முடித்தவுடன் எப்பேர்ப்பட்டத் தலைவர் என்று சொல்லிக் கொண்டே செயதிகளை கொட்ட ஆரம்பித்தார்.**

கருணாநிதி எப்படி இருக்கிறார். உண்மை நிலைதான் என்ன. பல்வேறு வதந்திகள் வந்த வண்ணம் உள்ளனவே என்று கேள்விகளை அடுக்கினோம்.

இருங்க... இருங்க.... அவர் நல்லாத்தான் இருக்கிறார். வயதானவர்களுக்கு எப்போது என்ன ஏற்படும் என்பதை கணிக்க இயலாது. ரத்தம் அழுத்தம், நீரழிவு, சிறுநீரக உபாதை என்று ஏதாவது ஒரு தொல்லைகள் வந்துகொண்டுதான் இருக்கும்.

**ஏற்கனவே ஆப்ரேஷன் செய்தார்களே...**

தொண்டையில் பொருத்தப்பட்ட கருவியை மாற்றச் சென்றபோது ஏற்பட்ட காய்ச்சலை தொடர்ந்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள்.

**ஜனாதிபதி உட்பட எல்லோரும் போய்ப் பார்த்திருக்கிறார்களே...**

கடந்த சனிக்கிழமை இரவு ஒன்றரை மணிக்கு உடல்நிலை சரியில்லாமல் காவேரி மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டபோது தமிழகமே பரபரப்புக்கு உள்ளானது. அன்றிலிருந்து ஒவ்வொருவராக வந்து பார்க்க ஆரம்பித்தார்கள்.

**ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம்தான் வதந்தி பரவியது.**

ஆமாம்... மருத்துவமனையிலிருந்து அறிக்கை வரும் என்று தொலைக்காட்சியில் தொடர்ந்து ஒளிபரப்பானாதால் நேரம் ஆக ஆக தொண்டர்கள் மத்தியிலே மிகப்பெரிய பயம் தொற்றிக் கொண்டது.

**இரவு ஒன்பது ஐம்பதுக்கு அறிக்கை வந்ததே..**

அந்த அறிக்கையில் கலைஞர் உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டது என்றும் தொடர்ந்து மருத்துவர்கள் கண்காணிப்பில் இருந்து வருகிறார்கள் என்றும் கூறப்பட்டது. சில தொலைக்காட்சிகள் பின்னடைவு என்பதை மாத்திரம் திரும்பத் திரும்ப ஒளிபரப்பியதால் அவரின் உடல்நிலை குறித்து தவறான தகவல் பரப்பப்படடது.

**சில இடங்களில் அவரது படத்தை வைத்து அஞ்சலி செய்தார்களாமே.**

மாற்றுக்கட்சிகள் கூட செய்யத்துணியாத ஒரு செயலை திமுகவினரே செய்ததுதான் கொடுமையிலும் கொடுமை.

**கட்சிப்பாகுபாடின்றி எல்லோரும் வந்துப் பார்த்தார்களே...**

அவரை கடுமையாக விமர்சனம் செய்யும் பா.ஜ.க., அதிமுக ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வந்து பார்த்ததை திமுகவினரே ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

**ஆனாலும் ரஜினி வந்துபோன பிறகு பரபரப்பு ஏற்பட்டதாமே?**

கலைஞரைப் பார்த்துவிட்டு வெளியே வந்த ரஜினி கலைஞரின் குடும்ப உறுப்பினர்களை

**ரஜினியை வைத்து அழகிரியை வளைத்து பின்னப்படும் பிஜேயின் அரசியல் வலையில் புதிய கூட்டணி உருவாக வாய்ப்பு இருக்கிறது.**





குறிப்பிடும்போது அழகிரியின் பெயரை முதலில் சொன்னதால் அதுவே தொலைக்காட்சியில் விவாதப் பொருளாகிவிட்டது. எப்படியோ அவர் பூரண நலம் பெற்றார் என்ற செய்தி மகிழ்ச்சிக் குரியதுதான். ஆனாலும் ...





**என்ன இழுக்குறீங்க...**

பிரதமர் மோடி வந்து பார்க்காததை வைத்து கயிறு திரிக்கும் வேலையை சிலர் வதந்தி பரப்பிவருவதை காண முடிகிறது.

**தேர்தல் வருமா...**

எந்த தேர்தலைக் கேட்கறீங்க... உள்ளாட்சி தேர்தலா? பாராளுமன்றத் தேர்தலா? உள்ளாட்சி தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் ஆளுங்கட்சியைவிட நீதிமன்றமே அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறது. 6ஆம் தேதிக்குள் தேர்தல் அட்டவணையை வெளியிட வேண்டும் என்று நீதிமன்றம் கெடுவிதித்துள்ளது. பார்ப்போம் என்ன நடக்கப்போகிறது என்று..

**எப்போது தேர்தல் வந்தாலும் சந்திக்க தயார் என்கிறாரே எடப்பாடி.**

வெளியே அப்படி சொன்னாலும் உள்ளுக்குள் கட்சியில் நடைபெறுகின்ற உள்குத்து வேலைகளை நினைத்து பயப்படாமல் இல்லை. அவருக்கும் ஓபிஎஸ் அணிக்கும் இருக்கின்ற குழப்பங்கள் தேர்தல் வந்தால் நிச்சயம் தெரிந்துவிடும்.

**திமுகவை விட்டு காங்கிரஸ் வெளியே வந்தால் காங்கிரசுடன் கூட்டு சேர தயாராக இருப்பதாக தினகரன் அறிவித்திருக்கிறாரே...**

அதற்கெல்லாம் சாத்தியமே இல்லை. ஏனென்றால் 2ஜி வழக்கு அவர்கள் இருவரையும் பின்னிப்பிணைத்திருக்கிறது.

**பா.ஜ.க. தமிழகத்தில் கூட்டணி அமைக்குமா?**

ரஜினியை வைத்து அழகிரியை வளைத்து பின்னப்படும் பிஜேயின் அரசியல் வலையில் புதிய கூட்டணி உருவாக வாய்ப்பு இருக்கிறது. எனவே அரசியலில் எதுவும் நடக்கலாம் என்று சொல்லிக் கொண்டே வெளியேறினார் கபாலிகான்.





# சந்தோஷமாக இருங்கள்...!

பிரெஸ்னோ பசிபிக் பல்கலைக்கழகத்தில் ஒரு சொற்பொழிவாளர் கூட்டத்தில் ஒரு தம்பதியரில் உள்ள பெண்மணியை பார்த்து கேட்டார்.

"உங்கள் கணவர் உங்களை சந்தோஷமாக பார்த்து கொள்கிறாரா?"

அருகிலிருந்த கணவர் நிமிர்ந்து, நம்பிக் கையுடன் அமர்ந்தார். காரணம், மனைவி அவரிடம் எந்த புகாரும் சொன்னதே இல்லை. அவர் சந்தோஷமாகவே இருந்தார்.

ஆனால், அந்த மனைவி தெளிவாக "இல்லை, என் கணவர் என்னை சந்தோஷமாக வைத்துக்கொள்ளவில்லை" என்றார்.

கணவர் அதிர்ந்தார். ஆனால், மனைவி தொடர்ந்தார்.

"என் கணவர் என்னை சந்தோஷமாக வைத்திருக்கவில்லை. என்னை சந்தோஷப் படுத்தியதும் இல்லை. ஆனால், நான் சந்தோஷமாக இருக்கிறேன். நான் சந்தோஷமாக இருப்பது என்பது அவரை சார்ந்தது இல்லை. என்னையே சார்ந்தது. நான் சந்தோஷமாக இருக்கிறேனா என்பது நான் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம்."

"வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சந்தோஷமாக இருப்பது என்பது என் முடிவு. அடுத்தவரால் நான் சந்தோஷமாக இருப்பேன் என்றால், இன்ன பொருளால் நான் சந்தோஷமாக இருப்பேன் என்றால், இன்னின்ன தருணங்களில் நான் சந்தோஷமாக இருப்பேனென்றால், நான் பெரும் பிரச்சனையில் இருக்கிறேன் என்று பொருள்."

"நம்மை சுற்றியுள்ள எல்லாம் மாறிக்கொண்டே இருக்கின்றன. மனிதர்கள், செல்வங்கள், என் உடல், தட்பவெப்பம், என் முதலாளி, சந்தோஷங்கள், நண்பர்கள், எனது உடல் மற்றும் மன ஆரோக்கியம் எல்லாமே. இது ஒரு நீண்ட பட்டியல்."

"என்ன ஆனாலும் சந்தோஷமாக இருப்பது என்பது நான் எடுத்த என் சுயமுடிவு. நிறைய இருந்தாலோ, குறைவாக இருந்தாலோ என் சந்தோஷம் குறைவதில்லை. வெளியே சென்றாலோ, வீட்டில் இருந்தாலோ, ஏழையாக இருந்தாலோ, பணக்காரியாக இருந்தாலோ என் சந்தோஷம் குறைவதில்லை."

"திருமணத்துக்கு முன்னும் சந்தோஷ மாகத்தான் இருந்தேன், பின்னும் சந்தோஷ மாகவே இருக்கிறேன். என்னை பற்றி எனக்கே சந்தோஷமாக இருப்பதால் சந்தோஷமாக இருக்கிறேன்."

"என் வாழ்க்கையை நான் விரும்ப காரணம் என் வாழ்க்கை மற்றவர்களதை விட சுலபமானதாக இருப்பதால் அல்ல. நான் தனிப்பட்ட முறையில் சந்தோஷமாக இருப்பது என்று தீர்மானித்திருப்பதால். நானே என் சந்தோஷத்துக்கு பொறுப்பு."



"இதை நான் ஒரு தீர்மானமாக மனதில் கொள்ளும்போது, என்னை சுமக்கும் பொறுப்பை மற்றவர்களிடமிருந்து நீக்குகிறேன். எதிர்பார்ப்பதும் இல்லை. வாழ்க்கைத்துணை உட்பட பிறரிடம் சந்தோஷத்தை எதிர்பார்த்திருந்தால் எனக்கு என்றோ பைத்தியம் பிடித்திருக்கும். இதுவே அனைவரது வாழ்க்கையையும் எளிதாக்குகிறது. அதனால்தான், எங்கள் திருமண வாழ்க்கை இத்தனை ஆண்டுகளாக சந்தோஷமாக இருந்து வருகிறது" என்றார் கைதட்டல் ஓயவே இல்லை.

உங்களை சந்தோஷமாக வைத்துக் கொள்ளும் பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்காதீர்கள். வெயிலோ, மழையோ, உடல் சரியில்லையா, பணமில்லையோ, காயப் பட்டிருந்தாலோ, வாழ்க்கைத்துணையால் விரும்பப்படவில்லையோ உங்கள் மனதில் உள்ள சந்தோஷத்தை மட்டும் எக்காரணம் விட்டுவிடாதீர்கள். உங்களை நீங்கள் மனதார மதிக்கும்வரை உங்களுக்குள் நீங்களே சந்தோஷப்பட்டுக்கொள்ளுவீர்கள். சந்தோஷம் வெளியில் இல்லவே இல்லை. உங்கள் உள்ளுக்குள் தான் சந்தோஷம் கொட்டிக் கிடக்கின்றது.*

## மன முதிர்ச்சி என்றால் என்ன?

- மற்றவர்களை திருத்துவதை விட்டு விட்டு நம்மை திருத்திக்கொள்வது.
- அனைவரையும் அப்படியே (குறை களுடன்) ஏற்றுக்கொள்வது.
- மற்றவர்களின் கருத்துக்களை அவர்கள் கோணத்திலிருந்து புரிந்து கொள்ளுதல்.
- எதை விட வேண்டுமோ அதை விட பழகிகொள்தல்.
- மற்றவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதை விடுதல்.
- செய்வதை மன அமைதியுடன் செய்வது.
- நம் புத்திசாலித்தனத்தை மற்றவர்களிடம் நிரூபிப்பதை விடுவது.
- நம் செயல்களை மற்றவர் ஏற்க வேண்டும் என்ற நிலையை விடுதல்.
- மற்றவர்களுடன் நம்மை ஒப்பிடுவதை விடுதல்.
- எதற்குமே சஞ்சலப்படாமல் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள முயற்சித்தல்..
- நம் அடிப்படை தேவைக்கும், நாம் அடைய விரும்புவற்றிற்கும் உள்ள வேறுபாட்டினை உணர்தல்.
- சந்தோசம் என்பது பொருள் சம்பந்தப் பட்டது அல்ல என்ற நிலையை அடைதல்.

**Dont Worry Be Happy**



# வெற்றிக்கு வழிகாட்டுகிறார் விப்ரோ தலைவர்



**இந்தியாவில், மென்பொருள் துறையில் தவிர்க்க முடியாத சக்தி அசிம் பிரேம்ஜி. 'விப்ரோ' நிறுவனத்தின் தலைவர். 'ஃபோர்ப்ஸ்' பத்திரிகை வெளியிட்ட, '2014ம் ஆண்டின் உலக பணக்காரர்கள்' பட்டியலில் 61வது இடம் பிடித்திருப்பவர். 2010ல் உலகின் சக்தி வாய்ந்த 20 பேரில் ஒருவராக 'ஆசியாவீக்' பத்திரிகையால் அடையாளம் காணப்பட்டவர். தன் அனுபவத்திலிருந்து அவர் கூறும் இந்தப் பாடங்கள் எந்தத் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும் பொருத்தமானவை!**

❖ 40 ஆண்டுகளுக்கு முன், அமல்னெரில் இருக்கும் 'விப்ரோ' தொழிற்சாலைக்குள் நான் நுழைந்தபோது ஏற்பட்ட முதல் எண்ணம் இதுதான். அப்போது எனக்கு 21 வயது. கடைசி சில வருடங்களை கலிஃபோர்னியா, ஸ்டாண்ட்ஃபோர்டு யுனிவர்சிட்டி இன்ஜினியரிங் ஸ்கூலில் கழித்திருந்தேன். சவால்கள் நிறைந்த எண்ணெய் நிறுவன தொழிலுக்கு பதிலாக நல்ல, குஷியான ஒரு தொழிலை தேர்ந்தெடுக்கச் சொல்லி நிறைய பேர் எனக்கு அறிவுரை சொல்லியிருந் தார்கள்.

இப்போது நினைத்துப் பார்க்கும் போது, அதற்குப் பதிலாக நான் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடிவெடுத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். உண்மையில், தலைமைப் பண்பு அதற்குள் இருந்துதான் தொடங்குகிறது. அது ஒரு சின்னக் குரல்.

நீங்கள் தொலைந்து போனதாக உணரும்போது, 'எங்கே போக வேண்டும்' என்பதை உங்களுக்குச் சொல்லும். அந்தக் குரலை நம்பினால், உங்களை நீங்களே நம்புவீர்கள். உங்களுக்கான தொழிலைத் தேர்ந்தெடுப்பது என்று வரும்போது, பொறுப்பையும் நீங்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

❖ இருக்கும் 5 ரூபாயை விட, இன்னும் ஒரு ரூபாயை சம்பாதிப்பது என்பது மிகவும் மதிப்பு வாய்ந்தது. உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்ட, பரம்பரைச் சொத்துகளை வைத்திருப்பவர்கள், 'எளிதாக வாழ்ந்தோமா, போனோமா' என்கிற பழைய பழமொழியையே கடைப்பிடிக்கிறார்கள். நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்து சேர்த்து வைத்திருந்தால், அதன் அருமை நமக்கு மட்டும்தான் தெரியும்.

❖ எல்லா நேரத்திலும் ஒருவரால் சதமடிக்க முடியாது. இதுதான் நான் கற்றுக் கொண்ட மூன்றாவது பாடம். வாழ்க்கை, நிறைய சவால்களைக் கொண்டது. சிலவற்றில் வெற்றி பெறலாம், சிலவற்றில் தோற்க நேரலாம். வெற்றி பெற்றதை அனுபவிக்க வேண்டும். ஆனால், அதை தலைக்கு மேல் ஏற அனுமதிக்கக் கூடாது. அப்படி நடக்கும் தருணம் எனில், ஏற்கனவே நீங்கள் தோல்விப் பாதையில் இருக்கிறீர்கள் என்று அர்த்தம். வாழ்க்கையில் எதிர்பாராத தோல்வி குறுக்கிட்டால், அதை இயற்கையான நிகழ்வாக எடுத்துக் கொள்ளுங்கள். முக்கியமான விஷயம் என்னவென்றால் எதையாவது இழக்கும்போது, அதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினையை இழக்காதீர்கள்.

❖ நான் கற்றுக்கொண்ட நான்காவது பாடம். பணிவின் முக்கியத்துவம்! நம்பிக்கைக்கும் கர்வத்துக்கும் நடுவில் மிகச் சின்ன இழைதான் வித்தியாசம் இருக்கிறது. நம்பிக்கையுள்ள மனிதர்கள் எப்போதும் கற்றுக் கொள்ளத் தயாராக இருப்பார்கள். ஐரோப்பாவிலுள்ள நிர்வாகிகள் குறித்து

ஓர் ஆய்வு நடந்தது. தலைமையில் வெற்றி பெறத் தேவைப்படும் ஒரு முக்கியமான தகுதி என்னவென்றால், எந்தச் சூழ்நிலையிலும் கற்றுக் கொள்வதற்கு விருப்பத்தோடு இருப்பதுதான் என்கிறது அந்த ஆய்வு. இன்னொருபுறம் கர்வம், கற்றுக் கொள்வதற்குத் தடை போட்டுவிடும். தெரிந்து கொள்ள வேண்டிய எல்லாவற்றையும் தெரிந்து கொள்கிற ஒருவர், செய்ய வேண்டிய எல்லாவற்றையும் சரியாக செய்து முடிக்கிறார் என்பதை இதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

❖ ஒன்றை எப்படி நன்றாகச் செய்து முடித்தோம் என்பதையல்ல. அதற்கு உறுதுணையாக ஒரு சிறந்த வழி இருந்தது என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். ஒரு பயணத்தில் விசேஷத் திறமை என்பது சென்று சேரும் இடம் அல்ல. சில நேரங்களில் படைப்பாற்றலுக்கும் கண்டுபிடிப்புக்கும் மற்ற துறைகளில் இருந்து உத்வேகம் தேவைப்படலாம். இசையில் ஐன்ஸ்டீனுக்கு இருந்த ஆர்வம் இயற்பியலில் இருந்ததைப் போலவே அதிகமாக இருந்தது. பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் ஒரு தத்துவவியலாளர் என்பதைப் போலவே கணித மேதையாகவும் இருந்தார். தனித் திறமையும் படைப்பாற்றலும் ஒன்றுக்கொன்று கையைப் பிடித்துக் கொண்டு செல்பவை.



❖ வெற்றி மற்றும் தோல்விக்கான வித்தியாசத்தைப் போலவே பதில் சொல்வதற்கும் எதிர்வினை ஆற்றுவதற்கும் உலக அளவு வித்தியாசம் இருக்கிறது. நாம் பதில் சொல்லும் போது, அமைதியான மனநிலையோடு ஒரு விஷயத்துக்கு எதெல்லாம் பொருத்தமாக இருக்கும் என்று மதிப்பிடுகிறோம். நம் நடவடிக்கைகளை கட்டுக்குள் வைத்திருக்கிறோம். எதிர்வினையாற்றும் போது, எதிராளி நம்மிடம் எதை எதிர்பார்க்கிறாரோ அதையே செய்து கொண்டிருக்கிறோம்.

❖ இளமையில் உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பது எளிது. உடற்பயிற்சி நீண்ட நேரம் நாம் உழைக்க உதவுகிறது என்பதற்கு மட்டுமல்ல. நாம் தூங்கும் நேரத்தையும் வெகுவாகக் குறைக்கிறது என்பதை நான் தெரிந்து கொண்டேன். மன அழுத்தம் உலகம் முழுக்க அதிகமாகி வருகிறது என்பது உண்மை. அதை சமாளிக்க நீங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டியது அவசியம்.

❖ 'மனக்கதவுகளைத் திறந்து வைக்க வேண்டும். ஆனால், காற்று உங்களுடைய தடங்களை அழித்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று மகாத்மா காந்தி சொல்வார். எதற்காகக் களத்தில் நிற்கிறோம், செயல்படுகிறோம் என்பதை ஒருவர் வரையறுத்துக் கொள்ள வேண்டும். அது கஷ்டமுமல்ல. ஒன்றை விவரிக்க பயன்படுத்தும் வார்த்தைகளில் அல்ல. சின்னச் சின்ன செயல்பாடுகளில்தான் மதிப்பீடுகள் இருக்கின்றன. அதுதான் மிகக் கடினமான பகுதி. யாரோ ஒருவர் இப்படிச் சொல்லியிருக்கிறார் 'நீங்கள் சொல்வதை என்னால் கேட்க முடியவில்லை. ஏனென்றால், நீங்கள் செய்தது அதைவிட சத்தமாக வெளியே வந்துவிட்டது."

❖ வெற்றி பெறுவதற்காக விளையாடுவது, நமக்குள்ளும் நம் குழுவினருக்குள்ளும் இருக்கும் சிறந்த விஷயங்களை வெளியே கொண்டு வரும். நமக்கு எட்டாத தூரத்தில் இருப்பதை அடைவதற்கான அளவுக்கு நமது விருப்பத்தை விரிவுபடுத்தி வெளியே கொண்டு வரும்.

எனினும், இது என்ன விலை கொடுத்தாவது வெற்றி பெற வேண்டும் என்பதல்ல. ஒவ்வொரு முறையும் வெற்றி பெற வேண்டும் என்பதும் அல்ல. மற்றவர்களின் செலவில் வெற்றியடைய வேண்டும் என்பதும் அல்ல. எல்லா நேரங்களிலும் புதுப்புது வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது தொடர்பானது. கடந்த முறை செய்ததை விட சிறப்பாக செய்ய வேண்டும் என்பதற்கான தொடர் முயற்சி.

❖ சிறிய அளவிலேனும் இந்த சமூகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற சமூகப் பொறுப்பு நம் எல்லோருக்குமே இருக்கிறது. **இருக்கிற அனைத்து சவால்களிலும் என்னைப் பொறுத்த வரை முக்கியமானது கல்வி. ஒரு முரண்பாடான சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். ஒரு பக்கம், வேலைவாய்ப்புகளை வைத்துக் கொண்டு பொருத்தமான திறமைசாலிகளை தேடிக் கொண்டிருக்கிறோம். வேலையில்லா திண்டாட்டம் மற்றும் வறுமை. இந்த இரண்டு விளிம்புகளையும் இணைக்க ஒரே வழி, அனைவருக்கும் தரமான கல்வியை அளிக்க வழி வகை செய்வதுதான்!**

# உருவமே இல்லாத சிவத் திருத்தலம்



புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார்கோயில் வட்டத்திலுள்ள, தேவார பாடல் பெற்ற சிவன் கோயில் ஆகும். மூலஸ்தானத்தில், சுவாமி அம்பாள் சிலைகள் இருப்பது தான் வழக்கம்; ஆனால், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகிலுள்ள ஆவுடையார்கோவிலில் சிவலிங்கத்துக்கு பதிலாக குவளையும், அம்பாளுக்கு பதிலாக பாதமும் மட்டுமே உள்ளது.

பொதுவாக, சிவாலய மூலஸ்தானங்களில், ஆவுடையார் மீது லிங்கம் இருக்கும்; ஆனால், இங்கு, வெறும் ஆவுடையார் மட்டுமே உள்ளது. லிங்கம் இருக்க வேண்டிய இடத்தில் குவளை சாத்தப்பட்டுள்ளது. குவளை உடலாகவும், உள்ளிருக்கும் உருவமற்ற பகுதி ஆத்மாவாகவும் கருதப்படுவதால், சுவாமிக்கு, ஆத்மநாதர்' என பெயர் வந்தது. கோவில்களில் தீபாராதனை தட்டைத் தொட்டு, பக்தர்கள் கண்ணில் ஒற்றிக் கொள்வர். ஆனால், இங்கு, சுவாமிக்கு தீபாராதனை செய்த தட்டை வெளியில் கொண்டு வருவதில்லை. ஆவுடையாருக்கு பின்புறம் வெள்ளை, சிவப்பு மற்றும் பச்சை நிறங்களில் மூன்று தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன. வெள்ளை நிறம் சூரியனாகவும், சிவப்பு அக்னியாவும், பச்சை நிறம், சந்திரனாகவும் கருதப்படுகின்றன.

சுவாமிக்கு சிலை இல்லை என்பதால், அவரது மூன்று கண்களை குறிக்கும் விதமாக இந்த தீபங்களை ஏற்றுகின்றனர். இவற்றை வணங்கினாலே தீபாராதனை தட்டை வணங்கியதற்கு சமம் என்பதால், அதை வெளியில் கொண்டு வருவதில்லை. அதேபோன்று, பொதுவாக, சிவன் கோவில்கள் கிழக்கு நோக்கியும், சில மேற்கு பார்த்தவாறும் இருக்கும். ஆனால், ஆவுடையார் கோவில் தெற்கு நோக்கி உள்ளது. சிவன், குருவாக இருந்து, தெற்கு நோக்கி அமர்ந்து உபதேசிக்கும் நிலையை, தட்சிணாமூர்த்தி என்பர்.'(தட்சிணம்)' என்றால் தெற்கு; சிவன்,

மாணிக்கவாசகருக்கு குருவாக உபதேசம் செய்த தலம் என்பதால், தெற்கு நோக்கி அமைந்துள்ளது.

சூரிய, சந்திர கிரகணங்களின் போது கோவில்களில் நடை சாத்தப்படுவது வழக்கம். ஆனால், இங்கு கிரகணநாளில், ஆறு கால பூஜை நடைபெறுகிறது. ஆதியந்தம் இல்லாத உருவமற்ற சிவனுக்கு, எக்காரணத்தாலும் பூஜை தடைபடக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்கின்றனர். அம்பாளின் பெயர் யோகாம்பாள்; இவளுக்கும் உருவம் இல்லை. சிவனை மீறி, தட்சனின் யாகத்திற்கு சென்றதற்கு மன்னிப்பு பெறுவதற்காக, இத்தலத்தில் யார் கண்ணுக்கும் தெரியாமல், உருவத்தை மறைத்து

தவம் செய்தாள். எனவே, அம்பாளுக்கும் விக்ரகம் இல்லை. அவள் தவம் செய்த போது பதிந்த பாதத்திற்கு மட்டுமே பூஜை நடைபெறுகிறது. பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக இப்பாதத்தை கண்ணாடியில் பிரதிபலிக்க செய்துள்ளனர். இவளது சன்னிதி அடைத்தே இருக்கும் என்பதால், சன்னிதி முன் உள்ள ஜன்னல் துவாரம் வழியாகத்தான் பாதத்தை தரிசிக்க முடியும்.

ஆத்மநாதர் முன் உள்ள படைக்கல்லில், புழுங்கல் அரிசியில் சமைத்த சூடான சாதத்தை ஆவி பறக்க கொட்டுவர். அப்போது சன்னிதி கதவுகள் சாத்தப்பட்டு, சிறிதுநேரம் கழித்து திறக்கப்படும். சுவாமி உருவமற்றவர் என்பதால், உருவமில்லாத ஆவியுடன் நைவேத்யம் படைக்கப்படுகிறது. இது தவிர பாகற்காய் மற்றும் கீரையும் நைவேத்தியமாக படைக்கப்படும்.

இந்தக் கோயிலிலே மற்ற சிவாலயங்களில் இருப்பது போல கொடிமரம் இல்லை. பலி பீடமும் இல்லை. நந்தியும் இல்லை. சுவாமிக்கு உருவமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் இங்கு வருகின்ற பக்தர்களுக்கு மற்ற கோயில்களைப் போல தீப ஆராதனையினைத் தொட்டு வணங்க அனுமதிப்பதும் இல்லை. மாணிக்கவாசகர் சோதியிலே கலந்துள்ளார் என்பதாலேயே தீபம் தருவதில்லை.



வெள்ளாற்றின் தென்கரையிலே பாண்டிய நாட்டு மன்னனாகிய அரிமர்த்தன பாண்டியரின் அமைச்சராக இருந்த மாணிக்கவாசகரால் எழுப்பப்பெற்ற திருப்பெருந்துறை என்கிற ஆவுடையார்கோயில் இன்றளவும் வாழ்வாங்கு வாழ்ந்து வளரும் தமிழ்கலைக்குக் கட்டியம் கூறுவது போல அமைந்திருப்பதே ஆகும்.

இங்குள்ள தேர் தமிழகத்திலுள்ள பெரிய தேர்கள் சிலவற்றில் ஒன்றாகும். திருநெல்வேலி, திருவாரூர், ஆவுடையார்கோயில் ஆகிய ஊர்களில் உள்ள தேர்கள்தான் தமிழகத்தில் உள்ள கோயில்களின் தேர்களில் மிகவும் பெரிய தேராகும். இந்த தேர்ச் சக்கரத்தின் குறுக்களவு மட்டும் 90 அங்குலம் ஆகும். சக்கரத்தின் அகலம் 36 அங்குலமாகும். 50 முதல் 500 பேர் வரை கூடினால் எந்தத் தேரையும் இழுத்து விடலாம். ஆனால் இந்த ஆவுடையார்கோயில் தேரை இழுக்க சுமார் 5000 பேர் கூடினால்தான் இழுக்க முடியுமாம். ஆவுடையார் கோயிலிலே 6 காலத்திற்குமே புழுங்கல் அரிசியால்தான் அமுது படைக்கப்படுகிறது. அதோடு பாகற்காய் கறியும் கீரையும் சேர்த்துப் படைக்கப் படுவது இங்கு மட்டும்தான்.


6 கால பூசைக்கும் தொடர்ந்து அமுது படைத்துக் கொண்டிருப்பதனால் ஆயிரக்கணக்கான வருடங்களாக இங்கு உள்ள அமுது படைக்கும் அடுப்பின் நெருப்பு அணைந்ததேயில்லை. பாண்டியர் சோழர் நாயக்க மன்னர்கள் கட்டியது இந்தக் கோயிலில் ஆனந்தசபை தேவசபை கனகசபை சிற்சபை நடனசபை பஞ்சாட்சரம் போன்ற மண்டப அமைப்புகள் உள்ளன. இக்கோயிலினுள் கருவறைப் பகுதியை மட்டும் மாணிக்கவாசகர் கட்டியதாகவும் அதைத் தொடர்ந்து விக்ரம சோழபாண்டியர் (பார்த்திபன் கனவு என்கிற சரித்திர நாவலில் சொல்லப்படுகிற அதே விக்ரமாதித்யசோழன் தான்) மற்றும் சோழ மன்னர்கள் தஞ்சையை ஆண்ட நாயக்கர் மன்னர்கள் மகாராஷ்டிர மன்னர்கள் இராமனாதபுரம் சேதுபதி மன்னர் சிவகங்கை மன்னர் புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர் பாலைவன ஜமீன்தார் ஆகியோரால் ஆறு மண்டபங்கள் இணைத்துக் கோவிலாக கட்டப்பட்டுளது.

இங்கு திருத்தமம் பொய்கை எனப்படும் வற்றாத திருக்குளமும் மூல விருட்சமான குருந்த மரமும் 96 அடி உயரம் 51 அடி அகலம் உடைய ராஜகோபுரம் ஆகியவையும் உள்ளன. இந்தக் கோவிலுக்குள் கருவறைக்கு மிக அருகில் 2 கிணறுகள் உள்ளன இதில் 5 அடி ஆழத்தில் இன்றும் தண்ணீர் ஊறுவது அதிசயத்திலும் அதிசயம்.

1000 ஆண்டுகளுக்கு முந்திய ஓலைச்சுவடி இந்த ஆவுடையார்கோயில் ஆத்மநாதர் ஆலயத்தில் 1000 ஆண்டுகளுக்கு முந்திய திருவாசகம் மற்றும் திருக்கோவையார் ஓலைச்சுவடிகள் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

ஆனந்த வாழ்வு பெற ஆவுடையாரை தரிசிப்போம்!

**- தொழுதாவூர் வேலாயுதம்**



# FULL FORM OF WORDS!

- PAN - Permanent Account Number.
- PDF - Portable Document format.
- SIM - Subscriber Identity Module.
- ATM - Automated Teller Machine.
- IFSC - Indian Financial System Code.
- FSSAI(Fssai) - Food Safety & Standards Authority of India.
- Wi-Fi - Wireless Fidelity.
- GOOGLE - Global Organization Of Oriented Group Language Of Earth.
- YAHOO - Yet Another Hierarchical Officious Oracle.
- WINDOW - Wide Interactive Network Development for Office work Solution.
- VIRUS - Vital Information Resources Under Siege.
- UMTS – Universal Mobile Telecommunicati ons System.
- AMOLED - Active-Matrix Organic Light Emitting diode.
- OLED - Organic Light-Emitting diode.
- IMEI - International Mobile Equipment Identity.
- ESN – Electronic Serial Number.
- UPS - Uninterruptible Power Supply.
- HDMI - High-Definition Multimedia Interface.
- VPN - Virtual Private Network.
- APN - Access Point Name.
- LED - Light Emitting Diode.
- DLNA – Digital Living Network Alliance.
- RAM - Random Access Memory.
- ROM - Read only memory.
- VGA - Video Graphics Array.
- QVGA - Quarter Video Graphics Array.
- WVGA - Wide video Graphics Array.
- WXGA - Widescreen Extended Graphics Array.
- USB - Universal Serial Bus.
- WLAN – Wireless Local Area Network.
- PPI - Pixels Per Inch.
- LCD - Liquid Crystal Display.
- HSDPA - High Speed Down link Aacket Access.
- HSUPA - High-Speed Uplink Packet Access.
- HSPA - High Speed Packet Access.

- GPRS - General Packet Radio Service.
- EDGE - Enhanced Data Rates for Globa Evolution.
- NFC – Near Field Communication.
- OTG - On-The-Go.
- S-LCD - Super Liquid Crystal Display.
- O.S - Operating System.
- SNS Social Network Service.
- H.S - HOTSPOT.
- P.O.I - Point Of Interest.
- GPS – Global Positioning System.
- DVD - Digital Video Disk.
- DTP - Desk Top Publishing.
- DNSE – Digital Natural Sound Engine.
- OVI - Ohio Video Intranet.
- CDMA - Code Division Multiple Access.
- WCDMA - Wide-band Code Division Multiple Access.
- GSM - Global System for Mobile Communications.
- DIVX - Digital Internet Video Access.
- APK – Authenticated Public Key.
- J2ME - Java 2 Micro Edition.
- SIS - Installation Source.
- DELL - Digital Electronic Link Library.
- ACER – Acquisition Collaboration Experimentation Reflection.
- RSS – Really Simple Syndication.
- TFT - Thin Film Transistor.
- AMR – Adaptive Multi-Rate.
- MPEG - Moving Pictures Experts Group.
- IVRS – Interactive Voice Response System.
- HP - Hewlett Packard.
- NEWS PAPER - North East West South Past and Present Events Report.
- CHESS - Chariot, Horse, Elephant, Soldiers.
- COLD - Chronic, Obstructive, Lung, Disease.
- JOKE - Joy of Kids Entertainment.
- AIM - Ambition in Mind
- DATE - Day and Time Evolution.
- EAT - Energy and Taste.
- TEA - Taste and Energy Admitted.
- PEN - Power Enriched in Nib.
- SMILE - Sweet Memories in Lips Expression.
- ETC - End of Thinking Capacity.
- OK - Objection Killed.
- Or - Orl Korec (Greek Word)
- Bye - Be with You Everyti me.





- S. சுருதி லட்சுமி
B.Sc. (Psychology)



# ரஜினி ஜோடி? மீண்டும் சிம்ரன்

காலா படத்திற்கு பின்னர் ரஜினிகாந்த், கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் நடித்து வருகிறார். இன்னும் படத்தின் தலைப்பு முடிவு செய்யப்படாத நிலையில், படத்திற்கான முதற்கட்ட படப்பிடிப்பு மேற்கு வங்க மாநிலத்தில் நடந்து முடிந்து, தற்போது அடுத்த கட்ட படப்பிடிப்பு உத்தரகாண்ட்டில் துவங்கி இருக்கிறது. இதில் ரஜினிக்கு ஜோடியாக சிம்ரன் நடித்து வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. வில்லனாக விஜய் சேதுபதியும், முக்கிய கதாபாத்திரங்களில் பாபி சிம்ஹா, அஞ்சலி, மேகா ஆகாஷ், முனிஷ் காந்த், சனத் ரெட்டி, தீபக் பரமேஷ் உள்ளிட்ட பலரும் நடிக்கின்றனர். சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். விரைவில் ரஜினி, விஜய் சேதுபதி சந்திக்கும் காட்சிகளையும், 2 வாரங்களில் ரஜினி மொத்த சம்பந்தப்பட்ட காட்சிகளையும் முடித்துவிட்டு ஓரிரு மாதங்களில் முழு படப்பிடிப்பையும் முடிக்க படக்குழு திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.




# விமல் நடிக்கும் 'இவனுக்கு எங்கேயோ மச்சம் இருக்கு'

ஏ. ஆர்.முகேஷ் இயக்கத்தில் விமல் ஆஷ்னா சவேரி இணைந்து நடிக்கும் படம் `இவனுக்கு எங்கேயோ மச்சம் இருக்கு'. இந்த படத்தை சாய் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் சார்பில் கன்னட பட உலகின் பிரபல நடிகையான சர்மிளா மாண்ரேவும், ஆர்.சாவண்ட் என்பவரும் இணைந்து தயாரிக்கின்றனர். சுமார் 40க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள சர்மிளா தயாரிக்கும் முதல் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த படத்தில் ஆனந்தராஜ், சிங்கம்புலி, வெற்றிவேல் ராஜா உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். கோபி ஒளிப்பதிவு செய்யும் இந்த படத்திற்கு நட்ராஜ் சங்கரன் இசையமைக்கிறார். தினேஷ் படத்தொகுப்பு பணிகளை மேற்கொள்கிறார். படம் பற்றி இயக்குனரிடம் கேட்ட போது, இது கிளாமர் கலந்த காமெடி படமாக உருவாகி வருகிறது. முதல் கட்ட படப்பிடிப்பு லண்டனில் நடைபெற்ற நிலையில், இரண்டாம் கட்ட படப்பிடிப்பு சென்னையில் நடந்து வருகிறது.



தியேட்டருக்குள் நுழையும் ஒவ்வொருவரும் ஜாலியான ஒரு பொழுது போக்கு அரங்குக்குள் நுழைந்த அனுபவத்தை உணர்வார்கள். எல்லா தரப்பு மக்களும் ரசிக்கக் கூடிய படமாக இருக்கும் என்கிறார்.

# அமலாபால் நடிக்கும் 'அதோ அந்த பறவை போல'

அமலாபால் திருமணமாகி விவாகரத்து வாங்கிய நிலையில், மீண்டும் சினிமாவில் பிசியாகி விட்டார். அவர் குடும்பப் பாங்காக நடித்து சமீபத்தில் வெளியான பாஸ்கர் ஒரு ராஸ்கல் படத்திற்கு போதிய வரவேற்பு கிடைக்கவில்லை. சமூக வலைதளங்களில் அவ்வப்போது கவர்ச்சி படங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தும் அமலாபால், அந்த படத்துக்காக சில காலம் படங்கள் வெளியிடாமல் இருந்தார். தற்போது மீண்டும் அதுபோன்ற படங்களை வெளியிட தொடங்கிவிட்டார். நேற்று அமலாபால் வெளியிட்ட படம் ஒன்றில் கவர்ச்சி தூக்கலாக இருந்தது. அந்த புகைப்படத்தை அவரது ரசிகர்கள் பெரிய அளவில் பகிர்ந்து வருகின்றனர். விஷ்ணு விஷாலுக்கு ஜோடியாக ராட்சஷன் படத்தில் நடிக்கும் அமலாபால், அதோ அந்த பறவை போல உள்ளிட்ட சில படங்களில் தனி கதாநாயகியாகவும் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.





# நமக்கு நாமே மருத்துவர்!

பரபரப்பு மிகுந்த அவசர உலகத்தில் வாழ்ந்து கொண்டு வருகிறோம். அன்பைப் பரிமாறும் இதயங்கள், அளவான சாப்பாடு, போதிய உடற்பயிற்சி அத்துடன் போதுமென்ற மனமும் கொண்டிருந்தாலே பெருமளவு நோய்கள் நம்மை அண்டாது பாதுகாக்க இயலும். அப்படியும் அவ்வப்போது ஏற்படும் சிறு உடல்நலக்குறைவுகளுக்கான தீர்வு வீட்டில் தினந்தோறும் பயன்படுத்தும் உணவுப் பொருட்களிலேயே கிடைக்கிறது.

**தலைவலி**

ஐந்தாறு துளசி இலைகளோடு ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம், சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

**தொண்டை கரகரப்பு**

சுக்கு, பால் மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை நன்கு வறுத்துப் பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட்டால் தொண்டை கரகரப்பு குணமாகும்.

**நெஞ்சு சளி**

தேங்காய் எண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆற வைத்து நெஞ்சில் தடவினால் சளி குணமாகும்.

**தொடர் விக்கல்**

நெல்லிக்காய் இடித்துச் சாறு பிழிந்து, தேன் சேர்த்துச் சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.

**வாய் நாற்றம்**

சட்டியில் படிகாரம் போட்டுக் காய்ச்சி ஆறவைத்து, அதனை ஒரு நாளைக்கு மூன்று வேளை வாய் கொப்பளித்து வந்தால் வாய் நாற்றம் போகும்.

**உதட்டு வெடிப்பு**

கரும்பு சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவி வந்தால் உதட்டு வெடிப்பு குணமாகும்.

**அஜீரணம்**

ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம் ஆகிய மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடித்தால் அஜீரணம் சரியாகும்.

**குடல்புண்**

மஞ்சளை தணலில் இட்டு, சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் கரி சாம்பலை தேன் கலந்து சாப்பிட்டால் குடல் புண் ஆறும்.

**வாயுத் தொல்லை**

வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீரில்

உட்கொள்வதினால் வாயுதொல்லை நீங்கும். அத்துடன் ஆறாத வயிற்றுப்புண்ணும் நீங்கும்.

**வயிற்று வலி**

வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் குடித்தால் வயிற்று வலி நீங்கும்.

**மலச்சிக்கல்**

செம்பருத்தி இலைகளை பொடியாக்கி, தினமும் இருவேளை சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் தீரும்.

**சீதபேதி**

மலை வாழைப்பழத்தை நல்லெண்ணையில் சேர்த்துச் சாப்பிட்டால் சீதபேதி குணமாகும்.

**பித்த வெடிப்பு**

கண்டங்கத்திரி இலைசாறை ஆலிவ் எண்ணையில் காய்ச்சி பூசி வந்தால் பித்த வெடிப்பு குணமாகும்.

**மூச்சுப்பிடிப்பு**

சூடம், சுக்கு, சாம்பிராணி, பெருங்காயம் இவைகளை சம அளவு எடுத்து சேர்த்து வடித்த கஞ்சியில் கலக்கி மறுபடியும் சூடுபடுத்தி மூச்சுப்பிடிப்பு உள்ள இடத்தில் மூன்று வேளை தடவினால் குணமாகும்.

**சரும நோய்**

கமலா ஆரஞ்சு தோலை வெயிலில் காயவைத்து பொடி செய்து தினமும் சோப்புக்கு பதிலாக உடம்பில் தேய்த்து குளித்து வந்தால் சரும நோய் குணமாகும்.



**தேமல்**

வெள்ளை பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்து தினமும் தோலில் தேய்த்து குளித்து வந்தால் தேமல் குணமாகும்.

**மூலம்**

கருணைக் கிழங்கை சிறுதுண்டுகளாய் நறுக்கி துவரம் பருப்புடன் சேர்த்து, சாம்பாராக செய்து சாப்பிட்டு வந்தால் மூலம் குணமாகும்.

**தீப்புண்**

வாழைத் தண்டை சுட்டு அதன் சாம்பலை தேங்காய் எண்ணையில் கலந்து தடவி வந்தால் தீப்புண், சீழ்வடிதல் மற்றும் காயங்கள் விரைவில் குணமாகும்.

**மூக்கடைப்பு**

ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லிட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி, பால், சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வந்தால் மூக்கடைப்பு விரைவில் நீங்கும். **– நிரோஷா**





# பல வழிகளில் பலன் தரும் விளாம்பழம்

பலமான ஓட்டுடன் பார்ப்பதற்கு மிக சாதாரணமாகத் தெரியும் விளாம்பழம் பல்வேறு மருத்துவ குணங்களைக்கொண்டது. இதன் கொழுந்து, இலை, காய், பிசின், பழம், ஓடு போன்ற அனைத்து பாகங்களும் மருந்துகளில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

‘விட்டதடி ஆசை விளாம்பழத்தின் ஓட்டோடு’ என்றொரு சொலவடை உண்டு. ‘பழத்தின் மீதான ஆசை, ஓட்டை பார்த்ததும் ஓடிவிட்டது’ என்பது இதன் அர்த்தம்.விளாங்காய் ஓட்டோடு ஒட்டிய நிலையில் இருக்கும். பழுத்து பக்குவத்திற்கு வந்ததும் எடைகுறைந்து, உள்ளுக்குள்ளேயே ஓட்டைவிட்டு விலகி விடும். நன்கு பழுத்த பழம், புளிப்பு கலந்த இனிப்பு சுவைதரும். எண்ணற்ற விதைகள் இருக்கும். விதைகளும் சுவை பொருந்தியதுதான்.

விளாம்பழம் தசை வளர்ச்சி மற்றும் உடல் வளர்ச்சிக்கு தேவையான சத்துக்களை தருகிறது. ரத்தத்தை சுத்தம் செய்கிறது. ஜீரண சக்தியை மேம்படுத்துகிறது. பசியை அதிகரிக்கிறது.

பித்தம் அதிகரிப்பதால் தலைவலி, கண்பார்வை மங்கல், இளநரை, ருசியின்மை போன்றவை ஏற்படும். அவைகளை இந்த பழம் போக்கும். இதில் புரதமும், தாது சத்துகளும் அதிகம் உள்ளதால், எலும்புகளை உறுதியாக்கும். ஞாபக சக்தியை மேம்படுத்தும். இதை ஒரு சிறந்த ஊட்டச்சத்து உணவாக போற்றலாம்.

விளாம்பழத்திற்கு சளியை அகற்றும்தன்மை இருக்கிறது. அதனுடன் அரை தேக்கரண்டி திப்பிலி பொடி கலந்து சாப்பிட்டால், மூச்சிறைப்பு மற்றும் மேல்மூச்சு ஏற்படுதல், விக்கல் போன்றவை நீங்கும். தொண்டை நோய்களும் குணமாகும். கல்லீரலில் உள்ள பிரச்சினைகளை போக்கும் சக்தியும் விளாம்பழத்திற்கு இருக்கிறது.

பூச்சிகள் மற்றும் விஷஜந்துக்கள் கடித்த இடங்களில் விளாம்பழத்தை பிசைந்து பூசலாம். புறஊதா கதிர்களால் முகத்தில் உண்டாகும் கருத்திட்டுகளுக்கு பழக்கூழை பூசி, பத்து நிமிடங்கள் வைத்திருந்து முகம்கழுவவேண்டும்.

விளா மர கொழுந்தை அரைத்து ஐந்து கிராம் அளவு எடுத்து, 100 மி.லி. பாலில் கலந்து சுவைக்கு கற்கண்டு கலந்து பருகினால், இருமல் இளைப்பு, பித்தசூடு போன்றவை நீங்கும்.

விளா மர இளந்தளிரை அரைத்து 10 கிராம் அளவு எடுத்து, 200 மி.லி. மோரில் கலந்து காலை, மாலை இரு நேரம், மூன்று நாட்கள் பருகினால், வயிற்று நோய்கள் குணமாகும். கொழுந்தை அரைத்து சாறு பிழிந்து வேர்குரு மற்றும் கோடை கொப்பளங்கள் மீது பூசி குளித்தால், நிவாரணம் கிடைக்கும்.

விளாங்காயை நீரிலிட்டு அவித்து, ஓட்டை நீக்கிவிட்டு தசைப் பகுதியை எடுக்கவேண்டும். அதை கஞ்சியில் கலந்து குடித்தால் மூலநோய் கட்டுப்படும். காயின் தசையை அவிக்காமல் வெயிலில் காயவைத்து பாதுகாத்து, புளிக்கு பதிலாக காய்கறிகளுடன் கலந்து சாப்பிடும் பழக்கம் இலங்கை மக்களிடம் உள்ளது.

விளாம்பழத்தின் பிசின் நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். அதில் சிறிதளவு எடுத்து, அரை தேக்கரண்டி வெண்ணெய்யுடன் கலந்து சாப்பிட்டால் பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல், நீர்எரிச்சல், மாதவிடாய் நேரத்தில் உண்டாகும் அதிக ரத்தப்போக்கு ஆகியவை நீங்கும். அதில் சிறு துண்டை வாயில் இட்டு சுவைத்தால் இருமல் நிற்கும். விளாம்பழ ஓட்டை காயவைத்து தூளாக்கி, சீயக்காய் தூள் கலந்து தலைக்கு தேய்த்து குளித்தால், சூடு நீங்கும். முடி உதிராது. இளநரை மாறும்.

**– என்.ரமேஷ்**



# கரும்பு இரும்பு எறும்பு

தன் மகன் சோம்பேறியாகவும், பொறுப்பு இல்லாத வனாகவும் இருப்பதைக் கண்ட ஒரு தந்தை அவனை அவ்வூரில் உள்ள பெரியவரிடம் அழைத்துச் சென்று அவனுக்கு அறிவுரை கூறுமாறு வேண்டினார். பெரியவரும் சிறுவனிடம், ''கரும்பாக இரு'' என்றார். பின் அதன் பொருளையும் பொறுமையாக விளக்கிச் சொன்னார். சிறுவன் மறுநாள் எல்லோரிடமும் அன்பாகப் பேசினான். கடுஞ்சொல் தவிர்த்தான். அவனுடைய இந்த மாற்றத்தைக் கண்டு மகிழ்ந்த தந்தை ஒரு வாரம் கழித்து மறுபடியும் அவனை அப் பெரியவரைப் போய்ப் பார்க்கச் சொன்னார். அவனும் மகிழ்ச்சியுடன் அவரைப் போய்ப் பார்க்க அவர்,

"எறும்பாக இரு,'' என்றார். அதன் பொருள் தெரிந்து கொண்ட அவன் சுறுசுறுப்பாக செயல் பட ஆரம்பித்தான்.சோம்பேறியாக இருந்த அவன் சுறு சுறுப்பானதும் அவனுக்கு பள்ளியிலும், நண்பர் களிடமும், உறவினர் களிடமும் நல்ல பெயர் வந்தது. எல்லோரும் அவனை பாராட்டவும் அவனுக்கு சிறிது தலைக்கனம் ஏற்பட்டது. மீண்டும் அவன் தந்தை பெரியவரைப் போய்ப் பார்க்கச் சொன்ன போது அது தேவையில்லை என மறுத்தான்.

பின் அவர் வற்புறுத்தலுக்காக அவன் பெரியவரிடம் சென்றான். அவன் முகத்தில் தோன்றிய கர்வ குறிப்பினைக் கண்ட பெரியவர் இம்முறை, ''துரும்பாக இரு,'' என்றார். அதன் பொருள் அறிந்த சிறுவன் தன் தவறை உணர்ந்து செயல்பட்டு நல்ல பெயர் எடுத்தான்.

# மாணவர் பக்கம்

## இந்திய பிரதமர்கள்

## நேரு முதல் மோடி வரை

1947 : ஜவஹர்லால் நேரு
1964 : குல்சாரிலால் நந்தா
1964 : லால் பகதூர் சாஸ்திரி
1966 : குல்சாரிலால் நந்தா
1966 : இந்திராகாந்தி
1977 : மொரார்ஜி தேசாய்
1979 : சரண்சிங்
1980 : இந்திராகாந்தி
1984 : ராஜீவ்காந்தி
1989 : V.P. சிங்
1990 : சந்திரசேகர்
1991 : P.V. நரசிம்மராவ்
1996 : A.B.வாஜ்பாய்
1996 : A.J. தேவகௌடா
1997 : I.K. குஜ்ரால்
1998 : A.B. வாஜ்பாய்
2004 : மன்மோஹன்சிங்
2014 : நரேந்திர மோடி



S.SURIYA
STD IX
SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL CHENNAI



# சருமத்தைப் பாதுகாக்க...

இன்றைய காலத்தில் இளம் வயதினர் விரைவில் முதுமையானவர்கள் போன்று காட்சியளிக்கின்றனர். இப்படி காட்சியளிப்பதற்கு சரும பராமரிப்புகளும், உண்ணும் உணவுகளும், பழக்கவழக்கங்களும் தான் முக்கிய காரணமாக விளங்குகின்றன.

அதிலும் தற்போது பெரும்பாலானோர் ஜங்க் உணவுகளை அதிகம் எடுத்து வருவதால், உடலில் பல பிரச்சனைகளை கொண்டு வருவதுடன், சருமத்தின் அழகையும் பாதிக்கிறது.

இதில் முக்கியமாக ஆண்கள் தான் விரைவில் முதுமையானவர்கள் போன்று காணப்படுகின்றனர். இதற்கு அவர்கள் தங்களின் சருமத்திற்கு போதிய பராமரிப்புக்களை கொடுக்காதது தான் காரணம்.



அக்காலத்தில் எல்லாம் தங்கள் சருமத்திற்கு எவ்வித பராமரிப்புக்களும் கொடுக்காமலேயே அழகாகவும் இளமையுடனும் காட்சியளித்தனர்.

ஆனால் இன்றைய மாசு நிறைந்த சுற்றுச்சூழலால் நாம் தவறாமல் தங்களின் சருமத்தைப் பராமரித்தால் தான் இளமைத் தோற்றத்தைப் பாதுகாக்க முடியும்.

## ஆரஞ்சு ஸ்கரப்

ஆரஞ்சு ஜூஸில் சிறிது தேன் மற்றும் சர்க்கரை சேர்த்து நன்கு மென்மையாகும் வரை கலந்து, பின் அதனை முகத்தில் தடவி 23 நிமிடம் ஸ்கரப் செய்து, குளிர்ந்த அல்லது வெதுவெதுப்பான நீரில் முகத்தை கழுவ வேண்டும். இதனால் ஆரஞ்சு ஜூஸில் உள்ள



வைட்டமின் சி சத்தானது பாதிப்படைந்த செல்களை புதுப்பித்து, இளமையான தோற்றத்தை தக்க வைக்கும். அதிலும் இந்த முறையை இரண்டு நாட்களுக்கு ஒருமுறை செய்து வர வேண்டும்.

### தக்காளி

உணவில் தக்காளியை அதிகம் சேர்த்து வருவதுடன், அதன் சாற்றினை தினமும் முகத்தில் தடவி மசாஜ் செய்து உலர வைத்து கழுவி வந்தால், அது சருமத்திற்கு தேவையான வைட்டமின் சி, ஏ மற்றும் கே சத்துக்களை வழங்கி, சருமத்தை பொலிவோடும் அழகாகவும் வைத்துக் கொள்ளும்.

### கற்றாழை

கற்றாழை ஜெல்லை தினமும் முகத்திற்கு தடவி மசாஜ் செய்து, 20 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவினால், சருமத்தில் தங்கியுள்ள நச்சுக்கள் அனைத்தும் வெளியேறி, சருமமானது இளமையுடன் காட்சியளிக்கும்.

### தேன் ஃபேஷியல்

வறட்சியுடனும், மென்மையிழந்து இருந்து சருமத்திற்கு தேன் ஃபேஷியல் செய்வது நல்ல பலனைத் தரும். அதற்கு தேனை சருமத்திற்கு தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

### வெள்ளரிக்காய்

வெள்ளரிக்காய் துண்டுகள் சரும செல்களை ரிலாக்ஸ் அடையச் செய்து, புத்துணர்ச்சியுடன் இருக்க உதவும். எனவே



தினமும் வெள்ளரிக்காய் துண்டுகளை கண்கள் மற்றும் முகத்தில் 20 நிமிடம் வைத்திருந்தால், முகம் பளிச்சென்று இருக்கும்.

### ஃபுரூட் ஃபேஷியல்

பாதி ஆப்பிளை நறுக்கி, அத்துடன் 5 ஸ்ட்ராபெர்ரியை சேர்த்து நன்கு அரைத்து, அதில் சிறிது கடலை மாவு சேர்த்து கலந்து, முகத்திற்கு தடவி 30 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.

இப்படி வாரம் ஒருமுறை செய்து வந்தால், சருமத்தில் உள்ள சுருக்கங்கள், கரும்புள்ளிகள், முதுமை கோடுகள் மறைந்து, முகம் சுத்தமாக அழகாக காணப்படும்.

### கடலை மாவு

கடலை மாவு மற்றும் மஞ்சள் தூள் இந்த ஃபேஸ் பேக், வெயிலால் ஏற்பட்ட கருமையை குறைப்பதோடு, பொலிவை அதிகரிக்கும். அதற்கு 4 டீஸ்பூன் கடலை மாவுடன், 1 டீஸ்பூன் மஞ்சள் தூள் மற்றும் சிறிது பால் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

### பேக்கிங் சோடா

பேக்கிங் சோடா இந்த முறை கூட முகத்தில் உள்ள கருமையைப் போக்கும். அதற்கு பேக்கிங் சோடாவை ரோஸ் வாட்டரில் கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவ வேண்டும்.

**- சௌந்தர்**



# அறிவை வளர்க்கும் ஆலயம்

அறிவை வளர்க்கும் ஆலயங்கள்தான் நூலகம். அதன் அவசியம் அறிந்தே, `இல்லங்கள் தோறும் நூலகம் இருக்க வேண்டியது அவசியம்` என்றார் அறிஞர் அண்ணா. இன்று உலகம் முழுவதும் நூலகங்கள் பெருகி உள்ளன. நூலக பெருமையை உலகோர் உணர்ந்ததையே இது காட்டுகிறது.

எகிப்தியர்கள் கி.மு. 300 ஆண்டில் அலக்சாண்டிரியாவில் 7 லட்சம் பேப்பர் உருளைகளை சேகரித்து வைத்திருந்ததே முதல் நூலகமாக அறியப்படுகிறது. கி.மு. 4ம் நூற்றாண்டில் ஜூலியஸ் சீசர் பல நூலகங்கள் உருவாக பெருமுயற்சி மேற்கொண்டதாக வரலாறு கூறுகிறது.

அமெரிக்காவில் உள்ள `லைப்ரரி ஆப் காங்கிரஸ்' நூலகமே உலகின் மிகப் பெரிய நூலகமாகும். 1800ல் தொடங்கப்பட்ட இந்நூலகத்தில் சுமார் 6 கோடி கையெழுத்துப் பிரதிகள், லட்சக்கணக்கான நூல்களும், ஒலி ஒளி நாடாக்களும் உள்ளன. இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் உள்ள போட்லி நூலகமே உலகின் மிகப்பெரிய பல்கலைக்கழக நூலகமாகும்.

இந்தியாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மைய நூலகங்கள் உள்ளன. இவற்றின் கீழ் பெரிய கிளை நூலகங்களும், சிறு நூலகங்களும் செயல்படுகின்றன. தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான ஊர்ப்புற நூலகங்களும், ஏராளமான தனியார் நூலகங்களும் உள்ளன.

கொல்கத்தாவின் பெல்வேடேர் பகுதியில் உள்ள இந்திய தேசிய நூலகம் இந்தியாவின் பெரிய நூலகம் என்ற சிறப்பை பெறுகிறது. 1836ல் பொது நூலகமாக இது செயல்படத் தொடங்கியது. 1903ம் ஆண்டில் கர்சன்பிரபு இந்த நூலகத்துடன் அபிஷியல் இம்பீரியல் நூலகத்தை இணைத்து நி இம்பீரியல் நூலகத்தை உருவாக்கினார். 1953ம் ஆண்டு பிப்ரவரி 1ந்தேதி முதல் இது தேசிய நூலகம் என்ற பெயருடன் செயல்பட்டு வருகிறது. 1990 வரை இங்கு 15 லட்சம் நூல்கள் இருந்தன. தற்போது சுமார் 20 லட்சம் நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளுடன் நூலகம் செயல்பட்டு வருகிறது. ***

கொல்கத்தாவில் இன்னொரு புகழ்பெற்ற நூலகம் இருக்கிறது. கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் மைய நூலகமான இதுதான் இந்தியாவின் பழமையான நூலகமாக திகழ்கிறது. 12121856ல் இந்தப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப் பட்டது. ஆரம்பத்தில் செனட் இல்லத்தில் செயல்பட்டு வந்த நூலகம் 1912 ல் தனிகட்டிடத்திற்கு மாறியது. தர்பங்கா மகாராஜா இதற்கு பெரிதும் உதவினார். 1935 வரை மாணவர்களுக்கு நூல்கள் வழங்கும் நூலகமாக



**- S.JANAKI**
**STD XI- GOOD SHEPHERED**
**M.H.S,School Chennai**

செயல்பட்ட இது, தற்போது ஆராய்ச்சி யாளர்களுக்கும் கைகொடுக்கிறது. இப்போது இங்கு சுமார் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இருக்கின்றன.

டெல்லியில் பிரசித்தி பெற்ற டெல்லி பொது நூலகம் இருக்கிறது. இந்திய அரசும், யுனெஸ்கோ அமைப்பும் இணைந்து ஏற்படுத்திய சிறப்புக்குரிய நூலகம் இது. மாதிரி பொது நூலகங்களை உருவாக்கும் திட்டத்தில் 1951ம் ஆண்டில் இந்த நூலகம் நிறுவப்பட்டது. ஆசியாவிலேயே மிகவும் சுறுசுறுப்பாக நூல்களை வழங்கும் நூலகம் என்று பெயர் பெற்ற நூலகம் இது. மைய நூலகமான இது சில பெரிய கிளை நூலகங்களையும், சிறு கிளை நூலகங்கள் பலவற்றையும் கொண்டு செயல்படுகிறது. இங்கு பார்வையற்றோருக்கான பிரெய்லி நூலகப் பிரிவும் செயல்படுகிறது. ***

சென்னையில் உள்ள கன்னிமாரா பொதுநூலகம் சிறப்புக்குரிய நூலகமாகும்.




இது 1896ல் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியாவின் அனைத்து வெளியீடுகள், ஐ.நா, யுனெஸ்கோ வெளியீடுகளும் இங்கு சேகரிக்கப்படுகிறது. 1990 வரை இங்கு 2 லட்சம் நூல்கள் இருந்தன. தற்போது சுமார் 6 லட்சம் நூல்கள் இருக்கின்றன. சென்னைப் பல்கலைக்கழக நூலகமும் சென்னையில் சிறப்பாக இயங்கும் இன்னொரு நூலகமாகும். இவ்விரு நூலகங்களிலும் பல்துறையைச் சேர்ந்த பன்மொழி நூல்கள் நிறைந்து கிடைக்கின்றன. நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இவற்றை பொதுமக்கள் அதிகமாக பயன்படுத்துகிறார்கள்.

சென்னை அடையாறில் உள்ள அடையாறு நூலகம் தமிழகத்தின் பழமையான நூலகம் ஆகும். ஸ்டீல் ஆல்காட் என்ற அமெரிக்கர் அரிய ஓலைச்சுவடிகள் மற்றும் பழமையான நூல்களை சேகரித்து இந்த நூலகத்தை 28 121886ல் நிறுவினார். சுற்றுலாப்பிரியரான இவர் அடையாறை ஓய்விடமாக பயன்படுத்தினார். அங்கு தனக்காக உருவாக்கிய நூலகத்தை உலகப்புகழ் பெற்றதாக உயர்த்தும் நோக்கத்தில் உலகம் முழுவதும் பயணித்து பயனுள்ள நூல்களை நூலகத்தில் சேர்த்தார். இங்கும் லட்சக்கணக்கான நூல்கள் பராமரிக்கப்படுகிறது. அரிய, பழமையான நூல்களின் கருவூலம் இந்நூலகம்.

தமிழகத்திற்கு புகழ் சேர்க்கும் விதத்தில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் நூலகம் "அண்ணா நூற்றாண்டு நூலகம்". 2010 செப்டம்பர் 15ல் இந்நூலகம் தமிழக முதலமைச்சர் கருணாநிதியால் திறந்து வைக்கப்பட்டது. 8 மாடி கட்டிடத்தில் செயல்படும் இது கன்னிமாரா நூலகத்தைவிட பெரியது. தெற்கு ஆசியாவின் பெரிய நூலகம் என்ற சிறப்பையும் இது பெற்றிருக்கிறது. இங்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் பிறமொழி நூல்கள் தனித்தனித் தளத்தில் வைக்கப்பட்டுள்ளன. பிரெய்லி நூலகப் பிரிவும் உள்ளது. இங்கு லட்சக்கணக்கான நூல்கள் சேகரிக்கப்பட்டிருப்பது கூடுதல் சிறப்பு.

டெல்லியில் உள்ள உலக விவகாரங் களுக்கான இந்தியன் கவுன்சில் நூலகம் 1 லட்சம் நூல்கள், 1 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்களுடன் இயங்கி வரும் முக்கிய நூலகமாகும். 1950 முதல் செயல்படும் இந்நூலகம் சட்டம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கு பெரிதும் கைகொடுக்கும். டெல்லி மத்திய தலைமைச் செயலக நூலகம் (21/2 லட்சம் நூல்கள்), உத்தரபிரதேசம் ஆசாத் நூலகம் (5 லட்சம் நூல்), கோவா வரலாற்று ஆவணக்காப்பகம், டெல்லி இண்டியன் நேஷனல் சயின்டிபிக் டாக்மென்ட்டேசன் சென்டர், அகமதாபாத் ஜேத்தாபாய் புத்தகாலயம், டெல்லி நேஷனல் ஆர்ச்சீவ்ஸ் ஆப் இண்டியா போன்றவை இந்தியாவின் குறிப்பிடத்தக்க நூலகங்களாகும்.




# வீடு கட்டும் செலவை குறைக்க முடியுமா?

**கட்டுமானப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே இருக்கிறது. இந்நிலையில் செலவுகளைக் குறைக்க முடியுமா என்ற எண்ணம் பரவலாக எழுந்துள்ளது.**

கட்டிடத்தின் அமைப்பும் கட்டுமான செலவுகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாக 20 மீ2 அளவுள்ள ஒரு கட்டிடத்தை 4 மீ அகலமும் 5 மீ நீளமுமாக சதுர வடிவில் அமைத்தால் கட்டுமான செலவு மிகவும் கூடும். ஏனென்றால் சுவரின் சுற்றளவு (Perimeter) 18 மீ வரும் இதையே செவ்வக வடிவிலோ , அரை வட்ட அல்லது வட்ட வடிவில் அமைத்தால் சுவரின் சுற்றளவு குறையும். தேவையான ஏரியாவும் நமக்கு கிடைக்கிறது அதே சமயம் சுவரின் சுற்றளவு குறைவதால் செங்கல் கட்டும் கணிசமான அளவில் குறைகிறது.

சதுரமான அமைப்பை விட செவ்வகமான மற்றும் வட்ட வடிவ அமைப்பே செலவை குறைக்கும் வழிமுறைகளில் சிறந்தது என அறியலாம்.

வட்ட வடிவும் செவ்வக அமைப்பும் ஒரே சுற்றளவுதான் என்றாலும் நம்முடைய தேவைகளை கருத்தில் கொண்டு அமைப்புகளை முடிவு செய்வது நலம். ஒரே கட்டிட ஏரியா அதன் அமைப்பின் மூலம் மனையில் அதிக அளவு காலியிடத்தை ஏற்படுத்துகிறது என்பதை கீழ் உள்ள படத்தின்



மூலம் தெளிவாக தெரிந்து கொள்ளலாம். நமக்கு தேவையான இடமும் கிடைக்கும் அதே நேரத்தில் அதிக அளவு காலியிடங்களின் மூலம் வீட்டிற்கு கிடைக்கும் காற்றோட்டமும் அதிகரிக்கும். ஆரோகயமாக வாழ்வதற்கு வீட்டினுள் கிடைக்கும் காற்றோட்டம் முக்கிய பங்களிப்பு ஆற்றும்.

**செங்கல் சுவர்**

செங்கல் சுவர்களை பூசாமல் விடுவதன் மூலம் கணிசமான அளவு செலவை குறைக்கலாம். செங்கல் சுவர்களுக்கு அது போண்ற பூச்சுமானமும் தேவையில்லை. இப்படிப் பூசிய வீடுகளில் வெயிலில் உள்ளே வெப்பமும் மழையில் உள்ளே குளிருமாக உள்ளது. சுவரைப் பூசாமல் விட்டால் மழைக் காலத்தில் வீட்டின் உள்ளே வெப்ப மாகவும் வெயில் காலத்தில் உள்ளே குளிர்ச்சியாகவும் இருக்கும். செலவும் குறைவு.




செங்கல் கட்டும் போது வழக்கமான ”இங்கிலீஸ் பாண்ட் (Engilish Bond)” க்கு பதிலாக ”ரேட்டிராப் பாண்ட் (Rat trap Bond)” உபயோகித்தால் செலவும் குறையும், அதே நேரத்தில் சுவரில் கேவிட்டி அமைப்பும் இருப்பதால் எந்தவிதமான தட்பவெப்ப நிலைக்கும் வீட்டினுள் இதமான அமைப்பை ஏற்படுத்துகிறது. இந்த இரு அமைப்பையும் கீழ் உள்ள பட்த்தின் மூலம் தெளிவாக அறியலாம்

சுவரில் டைல்ஸ் ஒட்டவே கூடாது. அது சுவர்களின் சுவாசத்தைக் கெடுக்கும். வீட்டுக்குள் காற்று வராது. அதனால்தான் வீட்டைப் பூட்டி விட்டு வெளியே சென்றவர்கள், திரும்பி வந்ததும் மின்விசிறியைப் போட்டுக்கொள்கிறார்கள். வீடு, இறுக்கமாக இருப்பதால் அதில் வசிப்போருக்கு நிறைய நோய்களும் வருகின்றன.

லாரி பேக்கர் கட்டிய உயர்தர விடுதிகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவநிலையங்கள் போன்றவை இயற்கை சூழலுடன் இணைந்து ஆடம்பரம் இல்லாத அழகுடன் திகழ்பவை. மருத்துவர்கள் லாரிபேக்கர் பாணி கட்டிடங்கள் நோயாளிகளுக்கு ஆறுதலானவையாக இருப்பதாக கூறினார்கள்.

குளிரூட்டும் வசதிக்காக லாரி பேக்கர் உருவாக்கிய உத்தியும் அபாரமானது. வீட்டுக்குள் சிறிய குளம் ஒன்றை உருவாக்கி அதனை சுற்றி சுட்ட செங்கலால் ஆன சுவரை அமைத்து விடுவார். அது நீரை உறிஞ்சி குளிர்ந்து வெளிவிட்டு குளிரூட்டும் பணியை செய்யும்.



ரூஃப் கான்கிரீட்டிற்கு (RoofConcrete) இவரின் முறை மிகுந்த ஆச்சர்யத்தை ஏற்படுத்தும். சிவில் இன்ஜியரிங்கின் மிகநுட்பமான விஷயங் களை பயன்படுத்தி செலவுகளை குறைக்கும் வழிமுறைகளை கூறியிருப்பார். அது குறித்தும் மேலும் பல விஷயங்களை குறித்தும் அடுத்த பதிவில் பார்க்கலாம்.

**- ஆர்.குணசேகரன்**



# கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத காவிரித் தண்ணீர்!

கர்நாடகம் ஜூன் மாதத்தில் 9.19 டி.எம்.சி. தண்ணீரும், ஜூலை மாதத்தில் 31.24 டி.எம்.சி.யும், ஆகஸ்டில் 45.95 டி.எம்.சி.யும், செப்டம்பரில் 36.76 டி.எம்.சி, அக்டோபரில் 20.22 டி.எம்.சி, நவம்பரில் 13.78 டி.எம்.சி., டிசம்பரில் 7.35 டி.எம்.சி., ஜனவரியில் 2.76 டி.எம்.சி., பிப்ரவரி முதல் மே வரை 2.50 டி.எம்.சி தண்ணீர் என மொத்தம் 177.25 டி.எம்.சி தண்ணீரை வழங்க வேண்டும் என காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தற்போது கர்நாடகத்தில் கனமழை பெய்து அதன்காரணமாக அங்கு இருக்கக்கூடிய அணைகளில் தண்ணீரை தேக்க முடியாமல் உபரி நீரை தமிழகத்திற்கு கர்நாடக அரசு திறந்துவிட்டுள்ளது. மாதந்தோறும் எந்த அளவிற்கு தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டிருக்கிறதோ அந்த அளவிற்கு தண்ணீரைத் திறந்துவிடாமல் அதிகமாக தண்ணீரை திறந்துவிடுவது கர்நாடகத்தில் உள்ள அணைகளைப் பாதுகாக்க வேண்டிதான் என்று விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த அரசியலை தாண்டி அப்படி தாண்டி காவிரியில் ஒரு காலக்கட்டத்தில் தண்ணீர் இல்லாத சூழலும், உபரியாக வரும் போது அதனைத் தேக்கி வைக்க வசதி இல்லாத சூழலும் நிலவுகிறது.

மேட்டூர் அணை 93.47 டி.எம்.சி அளவிற்கு மட்டுமே தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும். அதற்கு கீழ் உள்ள சிறிய அணைகள் எல்லாம் அதிகமான அளவில் தண்ணீரை தேக்கி வைக்க முடியாது. இந்நிலையில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80 அடியை எட்டிய போதே பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டுமென பல விவசாய அமைப்புகளும் கோரிக்கையை விடுத்தன. அப்போது அணையின் நீர்மட்டம் 109 அடியாகவும், அணையின் நீர் இருப்பு 76.99 டி.எம்.சி.யாகவும் இருந்தது. தொடர்ந்து ஏற்பட்ட கனமழையினால் நீர்வரத்து அதிகமாகி மேட்டூர் அணை அடுத்த இரண்டு தினங்களில் அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டிவிட்டது. அதன் பிறகு அளவுக்கு அதிகமாக தண்ணீர் மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்டு கல்லணை மற்றும் கீழணைகள் திறக்கப்பட்டு தற்போது அதிகமான நீர் கடலுக்கு சென்று வீணாகிவருகிறது.

இதற்கு முன்னரே மேட்டூர் அணையைத் திறந்தால் டெல்டா முழுவதும் உள்ள ஏரி, குளங்கள் நிரம்புவதற்கும், வயல்வெளிகளில் தண்ணீர் பாய்ந்து நிலத்தடி நீர் உயர்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

குடிமராமத்து பணிகளை மிகவும் தாமதப்படுத்தி தண்ணீர் திறக்கப்படும் நேரத்தில் அரைகுறையாக செய்துவிட்டு இதற்கான நிதி கொள்ளையடிக்கப்படுவது வழக்கமாக உள்ளது. இம்முறையும் இதே காரணத்தினால் ஒருபக்கம் மேட்டூர் அணை திறப்பது தாமதப்படுத்தப்பட்டதோடு, மறுபக்கம் குடிமராமத்து பணிகள் அரைகுறையாக முடிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கடந்த ஓராண்டுக்கு மேல் பாசன வடிகால் வாய்க்கால்கள் வறண்டு கிடந்த போதெல்லாம்

தூர்வாரும் பணியை மேற்கொள்ளாமல், தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்து மேட்டூர் அணை நிரம்புகிற வரை தூர்வாரும் பணியை தாமதப்படுத்துவது ஏன் என்ற கேள்விக்கு தமிழக அரசு பதில் சொல்லியாக வேண்டும்.

நடப்பாண்டில் மட்டுமல்லாமல் கடந்த பல ஆண்டுகளாகவும் இதே நிலைமை தான் ஏற்பட்டு வந்ததது. குறிப்பாக, 2013ம் ஆண்டு இதேபோல கடை மடைக்கு தண்ணீர் எட்டாத நிலையில் அதிகமான அளவு கடலில் திறந்து விடப்பட்டது. 2005ம் ஆண்டும் இதே போல பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்காத நிலையில் சுமார் 140 டி.எம்.சி. தண்ணீர் கடலுக்கு திறந்து விடப்பட்டது.

காவிரியில் உபரியாக கிடைக்கும் தண்ணீரை தேக்கி வைக்க பல புதிய பாசனத் திட்டங்கள் தீட்டப்பட்டிருந்த போதும் அவைகள் நிறைவேற்றுவதில் தமிழக அரசு அக்கறை காட்டவில்லை. குறிப்பாக, மாயனூர் கதவணையிலிருந்து காவிரி, வைகை, குண்டாறு இணைப்புத் திட்டம் தீட்டப்பட்டிருந்த போதும் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமானால் உபரி நீரை



தமிழகத்தின் வறண்ட மாவட்டங்களான புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கு காவிரியின் உபரிதண்ணீரை திருப்பிவிட்டு பயன்படுத்தியிருக்க முடியும். இதுபோல காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் ஏற்கனவே திட்டமிட்ட தலா 7 கதவணைகளை கட்டி முடிப்பதன் மூலம் ஓரளவு தண்ணீரை சேமித்து வைத்து பயன்படுத்த முடியும். இத்தகைய திட்டங்களை நிறைவேற்றாமல் கிடைக்கும் தண்ணீரை கடலில் திறந்துவிட்டு பின்னர் தண்ணீருக்காக கையேந்தும் நிலை நீடித்து வருகிறது.

பல நாட்களுக்கு முன்னரே கல்லணையிலிருந்து காவிரி மற்றும் வெண்ணாறு ஆகியவற்றில் முழுக் கொள்ளளவு தண்ணீரை திறக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத் தனர்.

முக்கொம்பு மேலணையிலிருந்து காவிரியில் திறக்கப்பட்டது போக மீதமுள்ள தண்ணீர் முழுவதும் கொள்ளிடம் ஆற்றில் திறக்கப்பட்டது.

கல்லணையிலிருந்து பிரியும் கல்லணைக் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டதால், அதில் தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது உடைப்பு சரி செய்யப்பட்டதையடுத்து, (ஜூலை 28) மாலை முதல் தண்ணீர் படிப்படியாக திறக்கப்படுகிறது. காவிரி, வெண்ணாறு ஆகியவற்றில் அதன் முழுக் கொள்ளளவைத் தாண்டி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.


கொள்ளிடத்தில் திறக்கப்படும் தண்ணீர் தற்போது அணைக் கரையிலிருந்து வடவாற்றில் 3 ஆயிரம் கன அடியும், தெற்கு ராஜன் மற்றும் வடக்கு ராஜன் வாய்க்கால்களிலும் அதன் முழு அளவுக்கு திறக்கப்படுகிறது. வடவாற்றில் திறக்கப்படும் தண்ணீர் வீராணம் ஏரிக்கு சென்றது. கொள்ளிடம் ஆற்றில் திறக்கப்பட்ட உபரி நீர் ஏறத்தாழ 40 ஆயிரம் கன அடி வீதம் பல நாட்களாக கடலில் கலந்து வீணாகிறது.

இந்த நிலையில் கரைபுரண்டு ஓடிவரும் காவேரி தஞ்சை பிள்ளையார்பட்டி அருகே கல்விராயன்பேட்டை கிராமத்தில் பலமிலந்திருந்த ஆற்றுக்கரை உடைந்து வயல்வெளியில் தண்ணீர் சீறிப்பாய்ந்தோடியது. மணல் மூட்டைகள் வைத்து உடைப்பை அடைக்கும் முயற்சி நடந்தது. அந்தப் பகுதியில் குடியிருப்புகள் இல்லாததால் பெரும் ஆபத்துகள் தடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 நாட்களுக்கு மேலாக அதிகரித்து வரும் வெள்ளப்பெருக்க நீரை தேக்கி வைக்க தமிழக பொதுப்பணித்துறை முன்னெச்சரிக்கையோடு செயல்பட தவறியதன் காரணமாக கடந்த 5 நாட்களாக கீழணையிலிருந்து கொள்ளிடம் ஆறு வழியாக இதுவரை சுமார் 15 டி.எம்.சி. தண்ணீர் பயனின்றி கடலில் கலந்து வருகிறது. அடுத்த சில நாட்களுக்கும் இதே நிலை நீடிக்கும் என தெரிகிறது.

அதேபோல் தமிழகத்தில் நீலகிரியில் பெய்துவரும் தொடர் மழையால் பில்லூர் அணை நிரம்பி பவானி ஆற்றில் உபரிநீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் பவானிசாகர் அணையும் ஓரிரு நாட்களில் நிரம்பி போகிறது. மேட்டூர் மற்றும் பவானிசாகர் அணைகள் நிரம்பி வழியும் போது திறந்துவிடப்படும் உபரிநீர் கடலில் கலந்து வீணாகி வருகிறது.

தமிழகத்திற்கு வருடத்திற்குவருடம் அணைகள் நிரம்பி உபரிநீர் வெளியேற்றும் அளவிற்கு அதிகப்படியான தண்ணீர் கிடைப்பதில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்கு பின் கிடைக்கும் தண்ணீரை ஆக்கப்பூர்வமான கிடப்பில் போடப்பட்டுள்ள நீர்பாசன





திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் தமிழகத்தின் தண்ணீர் தேவையை வறட்சி காலங்களில் பூர்த்தி செய்துக்கொள்ள முடியும். இதுபோன்ற காலங்களில் தான் அகலப்பாதாளத்திற்கு சென்றிருக்கும் நிலத்தடிநீரை உயர்த்த முடியும்.

அவினாசி அத்திக்கடவு திட்டம் இந்நேரம் நிறைவேற்றப்பட்டிருந்தால் பவானிசாகர் அணையிலிருந்து திறக்கப்படும் உபரிநீர் மூலம் குளம், குட்டைகளை நிரப்பி ஈரோடு, திருப்பூர் மற்றும் கோவை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திருக்க முடியும். மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டிய உடன் திறக்கப்படும் தண்ணீரும் வீணாக கடலில் தான் கலக்க போகிறது. கிடப்பில் போடப்பட்ட திருமணி முத்தாறு மற்றும் மேட்டூர் உபரிநீர் கால்வாய் திட்டங்கள் இந்நேரம் நிறைவேற்றப்பட்டிருந்தால் சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள குளம், குட்டைகளை மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்படும் உபரிநீரால் நிரப்பி நிலத்தடிநீரை செறிவூட்டிருக்க முடியும். காவிரி தண்ணீரை கர்நாடக அரசு நினைத்தாலும் தடுக்க முடியாது என்ற நிலையில்தான் நாளுக்கு நாள் வெளியேற்றப்படும் உபரிநீரை அதிகப்படுத்தி வருகிறது.

வறட்சி காலங்களில் தண்ணீருக்காக தமிழக மக்கள் மிகப்பெரிய போராட்டங்களை முன்னெடுக்கிறோம். ஆனால் அதிகமான தண்ணீர் கிடைக்கும் சமயங்களில் அதை மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கும் கிடப்பில் போடப்பட்டுள்ள அவினாசி அத்திக்கடவு, திருமணி முத்தாறு மற்றும் மேட்டூர் உபரிநீர் கால்வாய் திட்டம் உள்ளிட்ட இன்னும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கான எந்தவொரு முயற்சியையும் தமிழக அரசு எடுப்பதாக தெரியவில்லை. தண்ணீருக்காக தமிழகத்தில் போராட்டம் நடத்தும் அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் மற்றும் பொதுமக்களும் தமிழக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் நீரானது மக்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் வீணாக கடலில் கலந்து வருவது வாடிக்கையாக உள்ளது.

**ஆறுகளை இணைப்பது சாத்தியம் இல்லையென்றால் ஒருகோடியில் இருந்து மற்றுஒரு கோடியில் இடையுள்ள கண்மாய் கால்வாய்களை தேடி கண்டுபிடித்து இணைக்கலாம். பல நீர்நிலைகள் தூர்வாரி பராமரித்திருந்தால் நீரை கூடுதலாக சேமித்திருக்கலாம்.**

ஆறுகளை இணைப்பது சாத்தியம் இல்லையென்றால் ஒருகோடியில் இருந்து மற்றுஒரு கோடியில் இடையுள்ள கண்மாய் கால்வாய்களை தேடி கண்டுபிடித்து இணைக்கலாம். பல நீர்நிலைகள் காணாமல் போய்விட்டன. பல நீர் வழித்தடங்கள் குப்பை கூளங்கள் நிரம்பியுள்ளன.

கடைமடை வரை உள்ள பாசனப் பகுதிகளுக்கு செல்லும் வகையில் பாசன வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் கால்வாயில் மண்டிக்கிடக்கும் புதர்களையும் அகற்ற போர்க்கால அடிப்படையில் தூர்வாரும் பணியை பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ள வேண்டும்

தண்ணீர் திறப்புக்கு முன்பே கரை பாதுகாப்பு குளங்கள் ஏரிகள் சீரமைப்பை கண்டுகொள்ளாத அதிகாரிகளின் கவனக்குறைவே கரை உடைப்புக்கும் காரணம் என்கிறார்கள் விவசாயிகள். மேலும் பல இடங்களில் பலமில்லாத கரைகள் உள்ளது. அந்த இடங்களை கண்டறிந்து கரையை பலப்படுத்த வேண்டும் என்கின்றனர் விவசாயிகள்.

வழக்கம்போல அரசின் நிர்வாகத்திறமையின்மையால் இந்த முறையும் கடை மடைவிவசாயிகள் பாதிக்கப்படுவது உறுதியாகிவிட்டதால் விவசாயிகளின் அவலங்கள் தொடர்கதையாகி வருகிறது.

**- தஞ்சை ப்ரியன் ●**



# ரஜினி, கமல் கற்க வேண்டிய எம்.ஜி.ஆர் பாடம்?

**எம்.ஜி.ஆர். ஆட்சி அமைப்பேன் என்கிறார் ரஜினி. எம்.ஜி.ஆரைப் போலவே நடித்துக்கொண்டே அரசியலில் ஈடுபடுவேன் என்கிறார் கமல். இவர்கள் இருவரும் எம்.ஜி.ஆரைப் பற்றி சரியாக அறிந்துகொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.**

திரைத்துறையில் இருந்து அரசியலுக்கு வருவது ஒன்றும் தமிழ்நாட்டில் புதிதல்ல என்றாலும், தற்போது கமல்ஹாசனும், ரஜினிகாந்தும் அரசியல் களத்தில் இறங்கியுள்ள காலம்தான் முக்கியத்துவம் வாய்ந்தது.

எம்.ஜி.ஆர் சினிமாவில் நடித்துக்கொண்டிருந்த காலத்திலேயே திரைப்படத்துறையில் காலடி வைத்து விட்டவர்கள் கமலும், ரஜினியும். இன்னும் சொல்லப்போனால், எம்.ஜி.ஆரின் ஆதரவாளர்களாகவே கமலும், ரஜினியும் இருந்துள்ளார்கள் என்பதும் கடந்த கால வரலாறு. எம்.ஜி.ஆர் என்ற மிகப் பெரிய ஆளுமைக்குப் பின், தமிழ்நாட்டு அரசியலில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா ஆகியோர் மாறி மாறி அடுத்தடுத்து ஆட்சியில் இருந்த காலங்களில் எல்லாம், எந்தவித அரசியல் பிரவேசத்தையும் அறிவிக்காதவர்கள்தான் கமல்ஹாசனும், ரஜினிகாந்தும்.தவிர, கருணாநிதி, ஜெயலலிதா எனத் தமிழ்நாட்டில் யார் ஆட்சியில் இருந்தாலும், அவர்களை எதிர்த்து எந்தவித நிலைப்பாட்டையும் எடுக்காதவர்கள்.

1996ம் ஆண்டு தி.மு.க - த.மா.கா. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்த பின்னர் ரஜினிகாந்த், அரசியல்பக்கம் தலைவைத்துக்கூட படுக்கவில்லை. 2016 டிசம்பர் 5க்குப் பிறகு, அதாவது, ஜெயலலிதா மரணத்திற்குப் பின்னரே, இருவரும் அரசியல் பற்றி அதிகம் பேசத் தொடங்கினர். இருவருமே சினிமாவில் ஏறக்குறைய மிகப்பெரிய உச்சத்தை அடைந்துவிட்ட சூழலில், குழம்பிய குட்டையில் நாமும் இறங்கினால் என்ன என்ற எண்ணத்துடன் அரசியல் வானில் கால்பதிக்கத் திட்டமிட்டு, அதற்கான செயல்திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் கமல், ரஜினி...

“தமிழகத்தைப் பொறுத்தவரை கமல்ஹாசனோ, ரஜினியோ ஒரு மாற்றாகவோ, அரசியல் சக்தியாகவோ ஒருநாளும் வர முடியாது. ரஜினியைப் பொறுத்தவரை, எந்தப் பிரயோஜனமும் கிடையாது. அவர் பி.ஜே.பியின் பொம்மை. அவர்கள் ரஜினியைக் காற்றடித்து விடுகிறார்கள். கமல்ஹாசனுக்குப் பின்னணியிலும் வேறு ஏதோ தூண்டுதல் இருக்கலாம். சினிமாவில் சொந்தப் பணத்தைப் போட்டு நடிப்பதைப் போல், அரசியலிலும் அவர் பணத்தைப் போட்டு என்ன செய்யப்போகிறார் என்று தெரியவில்லை.

ரஜினி தன் சொந்தப் பணத்தை ஒருபோதும் செலவிடப் போவதில்லை.

ரஜினி, கமல் இருவருக்குமே அண்மையில் ஒரு மிகப்பெரிய சான்ஸ் கிடைத்தது. தமிழக அரசு



**தந்தி டி.வி. பரபரப்பான கருத்து கணிப்பை நடத்தி இருக்கிறது. அதில் அரசியலில் ரஜினிகாந்தும், கமல்ஹாசனும் வெற்றி பெறுவார்களா? என்று மக்களிடம் கருத்து கேட்டதில், 51 சதவீதம் பேர் அவர்களால் வெற்றி பெற முடியாது என்று கூறி இருக்கிறார்கள்.**



சமீபத்தில் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியது. அந்த நேரத்தில் இவர்கள் இருவருமே வாய் திறக்கவில்லை. அரசியலுக்கு வருவதாக அறிவித்த பின்னரும், மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்ட நிலையிலும் அவர்கள் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. அப்படியென்றால், மக்கள் பிரச்னைகளில் இவர்கள் இருவருமே நேரடியாக நிற்க மாட்டார்கள் என்பதுதான் அர்த்தம். அது தெளிவாகத் தெரிந்து விட்டது. இதுவே கமல், ரஜினி இருவருக்குமான முதல்கட்ட சோதனை எனலாம். இன்னும் சொல்லப்போனால், திராவிடப் பாரம்பரியம் என்பது எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலத்திலேயே மாறி விட்டது எனலாம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டே கூட, திராவிடக் கட்சிகளை எதிர்த்த நிலை தற்போது மாறிவிட்டது. அண்மையில் தூத்துக்குடி மாநில மாநாட்டில்கூட அக்கட்சியினர், இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தைத்தான் முதலாவதாக நிறைவேற்றியுள்ளனர். திராவிட நாகரிகத்தைத் திரும்ப கொண்டுவர வேண்டும் என்ற முடிவுக்கு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வந்துள்ளது. தி.மு.கவின் கட்டமைப்பு என்பது குறிப்பிடத்தக்கதாகும். சமூக நீதியில் அக்கட்சி ஒருபோதும் விட்டுக்கொடுக்காது. பிற்படுத்தப்பட்டோர், தலித் மற்றும் சிறுபான்மை மக்களுக்கான இடஒதுக்கீட்டை ஒருபோதும் தி.மு.க விட்டுக்கொடுக்காது. திராவிடம் என்பது ஓர் இயக்கம். அது தி.மு.க. என்ற கட்சியல்ல. சம்ஸ்கிருதம் போன்ற வட இந்திய மொழிகளுக்கு எதிரான இயக்கம் வலுவாக உள்ளது. உதாரணத்திற்கு கர்நாடக மாநில முன்னாள் முதல்வர் எடியூரப்பாவே, சமீபகாலமாக தங்களின் சமுதாயம் இந்துக்கள் அல்ல; வீர சைவம் என்கிறார். தி.மு.க. ஏற்படுத்திய தாக்கமே இதுபோன்ற மாற்றங்களுக்குக் காரணம். கேரளாவில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்பதைச் செயல்படுத்தியிருப்பதே, முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்த சட்டத்தைப் பின்பற்றித்தான் எனலாம். எந்த முறையில் பார்த்தாலும் ரஜினி, கமல் இருவருக்குமே தமிழக அரசியலில் எந்தவொரு இடமும் கிடையாது என்ற கருத்தும் நிலவுகிறது.

கமல்ஹாசனைப் பொறுத்தவரை இட ஒதுக்கீட்டுப் பிரச்னையில் என்ன நிலைப்பாட்டை எடுப்பார் என்பது இப்போதைக்குத் தெரியவில்லை. ரஜினி கர்நாடகாவில் குடியேறிய மராட்டியர். அவருக்கும் இடஒதுக்கீட்டில் என்ன கருத்து இருக்கும் எனத் தெரியாது. எனவே, இவர்கள் இருவரையுமே மிகவும் சீரியஸ் பாலிடிஷியன்களாக எடுத்துக்கொள்ள வேண்டியதே இல்லை. கமலாகட்டும், ரஜினியாகட்டும் தி.மு.கவின் வாக்கு விகிதத்தைப் பிரிக்க முடியாது என்பதே பலரின் கருத்து. ரஜினி ஏற்கெனவே சொல்லிவிட்டார். அவரின் இலக்கு சட்டசபைத் தேர்தல்தான் என்று. நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது பற்றி ரஜினி எதுவும் தெரிவிக்கவில்லை.


இங்கே, எம்.ஜி.ஆரையும், ஜெயலலிதாவையும் நாம் வேறுபடுத்தித்தான் பார்க்க வேண்டும். இருவருமே திராவிட இயக்கத்தில் இருந்து வேறுபட்டவர்கள்தான். எம்.ஜி.ஆர் காலத்தில் பெரியார் போன்ற தலைவர்களை முன்னிறுத்தி வலம் வந்தார். ஜெயலலிதா காலத்தில் சொல்லவே தேவையில்லை. திராவிட இயக்கங்கள் வளர்ந்த

சூழலில், அக்கொள்கைக்கு அவரும் எதிரானவர்தான். தூத்துக்குடி சி.பி.எம். மாநாட்டில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிரகாஷ் காரத், தி.மு.க. பற்றி கருத்து தெரிவித்ததும், எதிர்ப்பு கிளம்புகிறது என்றால், தி.மு.கவின் வீரியத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி இப்போதுள்ள சூழலில் தி.மு.கவைத் தவிர்த்து எந்தக் கட்சியோடு சேர்ந்து போட்டியிட முடியும்?

"கமல், ரஜினி இருவருமே அரசியல் களத்தில் சோபிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. ரஜினி கடந்த 30 ஆண்டுகளாகவே அரசியலுக்கு வருவதாகக் கூறிக்கொண்டிருந்தார். எம்.ஜி.ஆர். காலத்திலேயே ரஜினிக்கு அரசியல் ஆசை இருந்தது. ஆனால், அப்போது அவர் வெளிப்படுத்தவில்லை. சொல்லப்போனால் எம்.ஜி.ஆரின் ஆதரவாளர். இடைப்பட்ட காலத்தில் எதைப்பற்றியும் அவர் பேசவில்லை. ஜெயலலிதா இருந்தவரை கமலும், ரஜினியும் எதைப்பற்றியும் பேசவில்லை. ஜெயலலிதா இறந்த பின்னரே, இவர்கள் இருவருக்கும் ஒரு விழிப்புஉணர்வு ஏற்பட்டிருக்கிறதா சொல்றாங்க. இருவரின் அரசியல் பயணத்திற்கான தயார்படுத்துதலுமே உண்மையான மக்கள் தொண்டாற்றக்கூடிய வகையிலான போக்காகத் தெரியவில்லை. இருவருமே சினிமாவில் இருந்து ஏறக்குறைய ஓய்வுபெறக்கூடிய ஸ்டேஜில்தான் உள்ளனர். திரைப்படத்துறையில் இருவருக்குமே இனி போணியாகக்கூடிய எதிர்காலம் இருக்காது. அதனால், பொலிடிக்கலா செட்டில் ஆகி விடலாம் என்று கருதுகிறார்கள்.

எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பிச்ச காலச்சூழல், அவருடைய நிலை வேறு. அவர் இருபது, முப்பது ஆண்டுகள் ஒரு கட்சியில் பணியாற்றி, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, அறிஞர் அண்ணா உயிரோடு இருந்த காலத்திலேயே, எம்.ஜி.ஆரால்தான் தி.மு.கவுக்கு ஓட்டு விழும் என்பதை, வெளிப்படையாகவே அறிவித்து ஒப்புக்கொண்டுள்ளார். தமிழ்நாட்டில் 1967ல் தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு எம்.ஜி.ஆர். ஒரு மிகப்பெரிய சக்தியாகத் திகழ்ந்தார். மாநிலத்தின் பல இடங்களில் சுற்றுப்பயணம் பண்ணி, வாக்குவங்கியை ஸ்டிராங்காக வைத்துக் கொண்டிருந்தார். 1971லும் எம்.ஜி.ஆர் மேற்கொண்ட பிரசாரத்தினால் தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வந்தது. 1972ல்தான் எம்.ஜி.ஆரை, தி.மு.கவை விட்டு வெளியேற்றுகிறார்கள். 1962ல் எம்.எல்.சியாகவும், 1967ல் எம்.எல்.ஏவாகவும் அவர் இருந்துள்ளார். தமிழ்நாட்டில் ஒரு மிகப் பெரிய திராவிடக் கட்சியாக உருவெடுத்த தி.மு.கவுக்குக் கடுமையாகப் பணியாற்றி, தன் வாக்குவங்கியைக் கட்சிக்கு ஆதரவாகத் திருப்பி, ஒரு மிகப்பெரிய செல்வாக்கை ஏற்படுத்தி வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டில் அப்போது தி.மு.க. என்றாலே எம்.ஜி.ஆர். என்று கூறும் அளவுக்குப் புகழ்பெற்றவர்.

பின்னர் தி.மு.கவில் இருந்து தூக்கி எறியப்பட்டதால், மக்கள் மத்தியில் ஏற்பட்ட மிகப்பெரிய பரிதாப உணர்வை, தனக்கு சாதகமாக வாக்குகளாக மாற்றிக்கொள்ளும் வகையில் ஒரு கட்சியை 1972ல் ஆரம்பித்து, அ.தி.மு.கவை மிகக் கடுமையான சோதனைகளுக்கு மத்தியில் வளர்த்தவர் எம்.ஜி.ஆர். 1977ல் அவர் ஆட்சிக்கு வரும்வரை சுமார் ஐந்தாண்டுகள், தி.மு.க. ஆட்சி கலையும்வரை கடுமையான சோதனைகளை எதிர்கொண்டார். பொதுக்கூட்டம் போட்டால் தடை, ஷூட்டிங் போனால் எதிர்ப்பு என எல்லா



இடங்களிலும் எம்.ஜி.ஆருக்கு நெருக்கடிகளைக் கொடுத்து, அவற்றையெல்லாம் மீறி வளர்ந்தவர் அவர். திண்டுக்கல் மக்களவைத் தொகுதி இடைத்தேர்தல், கோவை கிழக்கு சட்டசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் எனத் தன் பலத்தை நிரூபித்து, ஃபவுண்டேஷனை ஸ்ட்ராங்காக அமைத்துக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர் எம்.ஜி.ஆர்.

அந்தக் காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, கமலும், ரஜினியும் எந்த அடக்குமுறைகளையும் சந்திக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறதோ, அந்தக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்து வந்துள்ள வரலாறும் உள்ளது. இப்போது திடீர்னு வந்து அரசியல் கட்சி ஆரம்பிக்கிறாங்க. இவர்களின் இந்தச் செயல்பாடு எந்தளவுக்கு ஓர் ஆழமான வேரூன்றுதலை

ஏற்படுத்தும் என்று யாராலும் இப்போது சொல்ல முடியாது.



இதேபோல, ஆந்திராவில் மிகப்பெரிய சூப்பர் ஸ்டாரான சிரஞ்சீவி, பிரஜா ராஜ்யம் என்ற பெயரில் கட்சி தொடங்கி, பின்னர் அக்கட்சியை காங்கிரஸ் கட்சியுடன் இணைத்துவிட்டு, தற்போது மீண்டும் சினிமாவில் நடித்துக்கொண்டிருக் கிறார். திருப்பதியில் சிரஞ்சீவி கட்சி தொடங்கியபோது பல லட்சம் பேர் கூடிய வரலாறும் உண்டு. ஆனால், அவரால் அரசியலில் சோபிக்க இயலவில்லை. எனவே, கமலஹாசனின் இந்த ஆடம்பர தொடக்கவிழா எல்லாம் இப்போதைக்கு ஒரு பப்ளிசிட்டிக்கு வேண்டுமானால் பயன்படுமே தவிர, வேறு எதற்கும் உதவாது.

எம்.ஜி.ஆர். கட்சியில் இருக்கும்போது, அவர் தன் சொந்தப்பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தவர். கட்சிக்காகவும், பொதுமக்களுக்காகவும் பணத்தை வழங்கியவர். அதுபோன்ற எந்தவொரு சம்பவமாவது கமலுக்கோ, ரஜினிக்கோ உண்டா? 2004ல் தமிழ்நாட்டில் சுனாமி தாக்குதல் நிகழ்ந்தது. 2015ல் சென்னையே ஸ்தம்பித்துப் போகும் அளவுக்கு வரலாறு காணாத மழை, வெள்ளம் ஏற்பட்டு, பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். இவற்றில், எந்த நிகழ்வுக்காவது இவர்கள் இருவரும் தங்கள் சொந்தப் பணத்தை செலவு செய்ததுண்டா? மக்களுக்கு தொண்டாற்றக்கூடிய, சேவையாற்றக்கூடிய இடத்தில் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் இவர்கள், சென்னையின் எந்தப் பகுதியிலாவது அரிசி, பருப்பு வழங்கிய முன்னுதாரணம் உண்டா? பொதுமக்களிடம் இவர்கள் இருவருக்கும் நேரடித் தொடர்பு உண்டா? எம்.ஜி.ஆரை எடுத்துக்கொண்டால், திரைப்படத்தில் நடிக்கும்போது, வெளிமாநிலங்களுக்குச் சென்றாலும், அங்கு ஏதாவது வறட்சி என்றால் தன் சொந்தப் பணத்தைக் கொடுக்கும் குணம் படைத்தவர்.

எனவே, இவர்கள் இருவருமே அரசியலில் எந்தளவுக்கு வெற்றிபெறுவார்கள் என்பது கேள்விக்குறிதான். தவிர, தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்னைகளில் இவர்கள் தெளிவான கருத்தைத் தெரிவிக்க மறுக்கிறார்கள். காவிரி பிரச்னை தொடர்பான வழக்கில், தமிழகத்திற்கான தண்ணீர் அளவு குறைக்கப்பட்டது. கமலோ, ரஜினியோ தங்களின் கருத்தை வெளிப்படுத்தத் தயங்குகிறார்கள். "சிஸ்டத்தை மாற்றப்போகிறேன். தமிழ்நாடு ஊழல் மயமாகிவிட்டது" என்று கூறும் ரஜினி, காவிரிப் பிரச்னையில் என்ன கருத்தைச் சொன்னார்? சினிமா இண்டஸ்ட்ரியிலும், ரசிகர்கள் மத்தியிலும் தன் செல்வாக்கைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதில் தெளிவாக உள்ளனர். எம்.ஜி.ஆரைப் பொறுத்தவரை, காங்கிரஸ்காரர் வீட்டில் தீப்பிடித்தாலும்கூட, தன் சொந்தப் பணத்தையோ, கட்சிப் பணத்தையோ உதவியாக வழங்குவார். பொதுமக்களிடம் ரஜினிக்கோ, கமலுக்கோ எந்தவிதத் தொடர்பும் இல்லை. எனவே, மக்கள் மத்தியில் இவர்கள் இருவருமே எடுபடப்போவதில்லை என்பதுதான் உண்மை. முழுக்க முழுக்க சுயநல, சந்தர்ப்பவாத அரசியல். எந்தவிதத்திலும் இவர்களின் அரசியல் பிரவேசம் மக்கள் நலன் சார்ந்ததல்ல. கொஞ்ச காலம் கமல், ரஜினி என்று செய்திகளில் வருவார்கள். எனவே, கமல், ரஜினி இருவரின் எதிர்காலம் எப்படி இருக்கும்? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்..."

இந்த நாடாளுமன்ற தேர்தல், தமிழகத்தில் ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு நடைபெறும் முதல் பொதுத்தேர்தல் என்பதால், கட்சிகளின் செல்வாக்கை எடைபோடும் முக்கிய தேர்தலாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

பெரும் ரசிகர்கள் பட்டாளத்துடன் முன்னணி நடிகர்களாக விளங்கும் ரஜினிகாந்தும், கமல்ஹாசனும் அரசியலில் குதித்து இருக்கிறார்கள். இருவரும் அரசியல் களத்துக்கு தயாராகும் வகையில், மாநிலம் முழுவதும் தனது ரசிகர் மன்றங்களை பலப்படுத்தி வருகிறார்.

விரைவில் தேர்தல் நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு, புதிய தலைவர்களின் வரவு போன்ற காரணங்களால் தமிழகத்தில் அரசியல் களம் சூடுபிடிக்க தொடங்கி இருக்கும் இந்த சூழ்நிலையில், தந்தி டி.வி. பரபரப்பான கருத்து கணிப்பை நடத்தி இருக்கிறது. அதில் அரசியலில் ரஜினிகாந்தும், கமல்ஹாசனும் வெற்றி பெறுவார்களா? என்று மக்களிடம் கருத்து கேட்டதில், 51 சதவீதம் பேர் அவர்களால் வெற்றி பெற முடியாது என்று கூறி இருக்கிறார்கள்.

இந்நிலையில் களத்தில் உள்ள ஆக ரஜினியும் கமலும் எம்.ஜி.ஆரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கிறது. அதை உணர்ந்து நடந்துக்கொண்டால் மதிப்பும் மரியாதையும் மிஞ்சும். இன்றைய தமிழகத்தை விட்டே ஓரம் கட்டிவிடும் அபாயமும் உள்ளது.

**- என். ரமேஷ்குமார்**

## எம் பதில்கள்




### உயர்பதவியில் வகிக்கும் பெண்கள் தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்களே...

தாங்கள் வகிக்கும் பொறுப்புக் கேற்ற பெருந்தன்மை இல்லாதது குறிப்பாக பெண்களுக்கு இல்லாதது வருந்தத்தக்கதே. உதாரணத்திற்கு மாணவர்களை வழிநடத்த வேண்டிய பேராசிரியரே மாணவிகளை தவறான பாதைக்கு அழைத்துச் செல்ல முயற்சித்த நிர்மலாதேவி, பெருமைமிக்க அண்ணா பல்கலைக் கழகத்தில் அதிக மார்க் போடுவதாக சொல்லி கோடிக்கணக்கில் பணம் பெற்ற உமா, புனிதமான இந்து அறநிலையத் துறையில் சிலைகளுக்கு பூச வேண்டிய தங்கத்தை பதுக்கிய உயர் பதவி வகித்த கவிதா ஆகியோர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப் பட்டிருக்கிறார்கள்

சட்டம் தன் கடமையைச் செய்திருக்கிறது.




### ஓபிஎஸ் சர்ச்சை ஓய்ந்துவிட்டதா?

இல்லை. அது நீறுபூத்த நெருப்பாக புகைந்துக்கொண்டிருக்கிறது. கலைஞர் மருத்துமனைக்கு போவதற்கு முதல்நாள் டெல்லி சென்ற ஓபிஎஸ் அங்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனை பார்க்க முடியாமல் அறைக்கு வெளியில் காத்திருந்துவிட்டு திரும்பினார். ஆனால் அவருடன் சென்ற மைத்ரேயன் நிர்மலா சீதாராமனை பார்த்துவிட்டு வருகிறார். இதனால் ஓ.பி.எஸ் அவமானப்படுத்தப்பட்டு விட்டதாக பரபரப்பு ஏற்பட்டுவிட்டது.

சென்னை திரும்பிய அவர் விமான நிலையத்தில் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றார். மறுநாளே அவர் மீதான சொத்துகுவிப்பு விசாரணை தொடங்கப்பட்டு விட்டதாக அரசின் சார்பில் நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

என்னதான் தாங்கள் அண்ணன் தம்பிகளைப் போன்று இருக்கிறோம் என்று முதல்வரும் துணை முதல்வரும் சொன்னாலும் உள்ளுக்குள் பங்காளிக் காய்ச்சல் அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. இதனுடைய எதிரொலி வர இருக்கின்ற தேர்தல்கள் அது உள்ளாட்சி தேர்தலாக இருந்தாலும் சரி, பாராளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி தெரியவரும். ஒரு வேளை முன்புபோல மோடி தலையிட்டு சமாதானம் செய்வாரோ என்னவோ!

## எம் பதில்கள்



எம் பதில்கள்



## ராகுல்காந்தியின் பாராளுமன்றப் பேச்சைப் படித்தீர்களா?

படித்தேன் என்று சொல்வதைவிட தொலைக்காட்சியில் பார்த்தேன் என்று சொல்வது தான் சரியாக இருக்கும். இந்தியில் அவர் பேசினாலும் அவருடைய தமிழாக்கம் தொலைக்காட்சியில் சப்டைட்டிலாக தமிழில் கீழே போடப்பட்டது.

இந்தியாவில் மோடியின் ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகளை அவர் பட்டிய லிட்டார். குறிப்பாக ஜிஎஸ்டி மூலம் சிறு, குறு தொழில்கள் பாதிப்பு, பண மதிப்பிழப்பு மூலம் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவு, விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள கடன் தொல்லையால் ஏற்பட்ட மரணங்கள், தலித் பெண்கள், சிறுபான்மையினர் ஆகியோர் மீதான தாக்குதல்கள் ஆகியவற்றை பட்டியலிட்டு மோடி அரசை கடுமையாக சாடினார். இது தங்கள் எண்ணத்தை பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தி விட்டதாக பொதுமக்கள் மத்தியிலே ராகுலுக்கு வரவேற்பு கிடைத்தது.

ஆனால் பேசி முடித்தவுடன் யாரும் எதிர்பாராத விதத்தில் மோடியின் இருக்கைக்கு அருகே சென்று அவரை கட்டித் தழுவியதும் பதிலுக்கு மோடி அவரை தட்டிக்கொடுத்ததும் அந்தப் பேச்சின் வேகத்தை குறைத்துவிட்டது.

## ஹீலர் பாஸ்கர் கைது செய்யப்பட்டிருக்கிறாரே?

தொலைக்காட்சியில் அவர் மருந்தில்லா மருத்துவம் என்ற தலைப்பில் மெகா தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சியைப் பார்த்து நாம் மகிழாத நாளே இல்லை. ஏன் எனில் அவர் சொல்லுகின்றன விதம் நமக்கு பிடித்த ஒருவர் நம்மிடையே பேசும்போது ஏற்படுகின்ற உணர்வுதான் அது.

அவர் தற்சமயம் சுகப்பிரசவம் குறித்து வகுப்புகள் நடத்தியதாக கைது செய்யப் பட்டிருக்கிறார். ஏற்கனவே பல முறை பல வகுப்புகள் நடத்திய நிலையில் இப்போது கைது செய்யப்பட்டிருப்பதின் பிண்ணனியில் பன்னாட்டு நிறுவனத்தின் சதி இருக்குமோ என்று சமூக வலை தளங்களில் பேசப் படுகிறது.

ஏன் என்றால் அவர் ஏற்கனவே இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நாம் கற்றுக்கொள்ளும் விதமாக தேய்காய் எண்ணெய் சோப்பு, செக்கு எண்ணெய் வகைகள், இயற்கை அரிசி, இயற்கை உணவுப் பொருட்கள் என்று பல்வேறு இயற்கைப் பொருட்களை மக்கள் பயன்படுத்தும் விதமாக தயார்படுத்தி வந்துள்ளார். மேலும் இதற்காக வரும் ஆகஸ்ட் 15 சென்னையில் நம் வீட்டில் பயன்படுத்தக்கூடிய 42 வகையான பொருட்களை நாமே சொந்த செலவில் தயாரித்துக்கொள்ளலாம் என்பதற்கான பயிற்சியை நடத்த இருந்தார்.

இதனால் தங்கள் விற்பனை பாதிக்கப்படுமோ என்று எண்ணி அரசிடம் நெருக்கடி கொடுத்து பாஸ்கரை கைது செய்திருப்பார்களோ என்ற எண்ணமும் சமூக வலைதளங்களில் விவாதிக்கப் பட்டு வருகிறது.


எம் பதில்கள்



## சிலை கடத்தல் வழக்கில் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளதே?

எம் பதில்கள்





இது குறித்து கருத்து தெரிவித்த மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் சிபிஐ விசாரணை குறித்து மத்திய அரசுதான் முடிவு செய்யும் என்கிறார். மேலும் பொன்மாணிக்கவேல் பற்றி அவர் குறிப்பிடும்போது நூறு ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போன நிலைகளை அவர் மீட்டுக்கொடுத்துள்ளார் என்று அவர் கூறினார். பெரும்பாலானோரின் கருத்து பொன். மாணிக்கவேல் தொடர்ந்து சிலை கடத்தல் வழக்கில் விசாரித்து வந்தால் வழக்கை அதனால் அரசியல் முக்கியப் புள்ளிகள் சில பேர் மாட்டக்கூடும் என்பதால் சிபிஐ விசாரணைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## தா.பாண்டியன் மருத்துவ மனையில் இருக்கிறாரே?



எம் பதில்கள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த முன்னோடிகளில் ஒருவரான தா.பாண்டியன் சிறுநீரக கோளாறு காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். போராட்டத்தில் ஈடுபட்டு தீர்வு காண்பதிலும் கம்யூனிஸ்ட் கட்சியை வளர்த்தெடுத்ததிலும் அவர் ஆற்றிய பங்கு மகத்தானது. எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பித்தபோது அவரை ஆதரித்தவர். ஜெயலலிதா ஆட்சி நடத்தியபோது அவருக்கு ஆதரவு கொடுத்தவர். கூட்டணி இருந்தபோதும் திமுகவோடு அதிகம் ஈடுபாடு காட்டாதவர். ஆனாலும்கூட அவர் உடல்நிலை சரியில்லாதபோது திமுக செயல்தலைவர் முகஸ்டாலினும் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும் நேரில் சென்று பார்த்து நலம் விசாரித்து வந்துள்ளனர். விரைவில் நலம் பெற்று பொதுப்பணியில் சிறந்து செயல்பட தா.பாண்டியன் அவர்களை வாழ்த்துகிறோம்.



# கடுமையாக உழைப்பதை விட திறமையாக உழைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்

காட்டில் ஒரு நாள், நாய் ஒன்று வழி தவறிவிட்டது. அப்பொழுது அங்கு சிங்கம் ஒன்று பசியோடு அலைவதைப் பார்த்த நாய் ஒரு நிமிடம் பதறி இன்றோடு நம் கதை முடிந்தது என்று எண்ணியது.

அப்பொழுது அங்கு கிடந்த எலும்பு துண்டுகளைப் பார்த்ததும் அருமையான திட்டம் ஒன்றை தீட்டியது. சிங்கம் வரும் வழியில் திரும்பி உக்கார்ந்து கொண்டு எலும்பு துண்டுகளை சுவைக்க தொடங்கியது.

சுவைத்து கொண்டே சத்தமாக, "சிங்கத்தை கொன்று தின்பது எவ்வளவு சுவையாக உள்ளது, ஆனால் வயிறு நிறையவில்லை. இன்னொரு சிங்கம் கிடைத்தால், ஆஹா! வயறு நிறைந்து விடும்" என்று கூறியது.

இதைக் கேட்ட சிங்கம் "அய்யோ. இந்த நாய் சிங்கத்தை அல்லவா கொன்று தின்கிறது" என்று நினைத்து பயந்து அங்கிருந்து ஓடி போனது. இதையெல்லாம் தூரத்தில் இருந்து நரி ஒன்று பார்த்து கொண்டிருந்தது.

சிங்கத்தை ஏமாற்றிய இந்த நாயை சிங்கத்திடம் போட்டுக் கொடுத்தால், சிங்கத்தின் நடப்பை பெற்று வாழ் நாளெல்லாம் பயம் இல்லாமல் வாழலாம் என்று நினைத்தது. உடனே சிங்கத்திடம் சென்று, நாய் செய்த தந்திரத்தைப் பற்றி சொன்னது.

அதை கவனித்த நாய் எதோ தப்பு நடக்க போகிறது என்று உணர்ந்தது. நரி சொன்னதைக் கேட்ட சிங்கம் கோபம் கொண்டு, "இப்பொழுது அந்த நாயை என்ன செய்கிறேன் பார். நீ என் முதுகில் ஏறி கொள்" என்று நரியை முதுகில் ஏந்திய படி நாய் இருந்த இடத்தை நோக்கி ஓடியது. இப்போது அந்த நாய் என்ன செய்திருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடியுமா? தன்னை நோக்கி சிங்கம் பாய்ந்து வருவதைப் பார்த்த நாய், முன் போலவே திரும்பி உட்கார்ந்து கொண்டு, "இந்த நரியை அனுப்பி ஒரு மணி நேரமாகிவிட்டது. இன்னும் ஒரு சிங்கத்தைக் கூட ஏமாற்றி அழைத்து வரவில்லையே" என்று உரக்க கூறியது.

இதை கேட்டதும், சிங்கம் நரியை தூக்கி எரிந்து விட்டு திரும்பிக்கூட பார்க்காமல் ஓடியே விட்டது. நாம் அருகில் மட்டும் இல்லை கொஞ்சம் தூரத்திலும் பல நரிகள் நம்மை சுற்றி இருக்கலாம், அவர்களை அடையாளம் காண முயற்சி செய்யுங்கள். "கடுமையாக உழைப்பதை விட திறமையாக உழைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்".

Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue,9,Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021.
Editor : M.SUNDARAMOORTHY.

Management Target : Aim to achieve total 1,500 (One thousand Five hundred only) Membership of Life Term /Resident/All other categories of Memberships for First year Target of 1000 and second year rest with Launch of Membership selling before Oct'18 & Launch of Overall Club Operations by April '19 with full operations Building –Consists ofoverall Basement+Ground + Stilt + Nine Floors with Open air Terrace with total built up areas of 1.35 Lakhs Sqft (One Lakh thirty five thousands only)

Club Provision areas: Basment Part + Ground+Stilt+Floors 1-2 & 3 – For total /Part Back office Operational areas such as Staff Entrance/Time office/Security/ Stores/House Keeping/Laundry/ Staff Cloat rooms with Dinning related facilities at Basement and minimizing or shifting Basement Car parking to different areas and allocating overall nearly 50,000 Sqft area for Club Facilities and services


## SUITES

SUITES is Independent operation as Hotel Serviced Apartmentsof Three Star category International Standards of Facilities & Services with Long &Short Term Corporates / Company Leases besides Daily Renting, function to the Concept of Hotel with Overall operation will be with separate Identity as Hotel Suites - Part of MIBC

## LAKEVIEW SUITES

PROFILE Suggested of 55 Suites (with 125 Bed rooms) which includes Exclusive Entrance Reception /Lobby with Facilities One Multi Cuisine 75 covers Restaurant , Room Service ,Conference Halls Two and One Party Hall 100 covers, Cozy Bar and Indoor Games such as Snooker,Table Tennis/Business Center with Roof Top Two Dinning outlets proposals Suites Provision areas 4th to 9th Floors where 4th floor for facilities & back offices and 5th to 9th Floors will Rooms/Suites Accommodation with Occupying nearly 90,000 sqft areas Hotel Suites Guest will have access for Club's Facilities such as Bar ,other Facilities to the Limited access includes facilities such as Boat Club and limited access for Swimming pool For the success of the Hotel Suites

Management –Independent Management on Overall operation s and Accounts systems Planned to







Launch along with the Club BY April 2019. Common Facilities for Club & Hotel Suites as below given

- Bar
- Spa and GYM
- Swimming Pool
- Boat Club facilities

... Contd On Page: 52

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/16-18
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month

## REQUIRED INVESTMENTS

Investments on this MIBC project Follows on below Categories Returnable Deposit to Building Owner.

Licensing & Approvals Government & Local Authoriti8es Modification of present Building to the Infrastructure of Professional Club & Hotel Suites Creating New Facilities such as Swimming pool ,Boat Club and Roof top Restaurants Interiors –Fixtures – Fittings &Furniture Professional Consultant Fees and related Expenses Kitchens, Banquets, Restaurants &other Departments Equipments& Machineries House keeping Purchase of All Linens/Towels/Beds / related Misc items Technology - Setting up Entire Club & Suites Computorised,Property Management Software – Wi-Fi and other Digital systems Recruitment of Staff from Chennai and other States – Staff Uniforms and Establishing Managers & Staff Accommodations – Furnishing and related facilities Overall Club &Suites Infrastructure, Administration & Misc Related Expenditures Chennai and other States Marketing for Club Membership and Hotel Suites promotions -Advertisements and Grand Launching

Expected to achieve 1500 Members of all categories which includes – suggested Members Onetime fee – Non Refundable –Below Fee Structure are suggested ones

| | | |
|---|---|---|
| 1. | Life Membership proposed at | 2.50(L) |
| 2. | Resident -do- | 1.50 |
| 3. | Non Resident | 0.75 |
| 4. | Corporate & Companies (Three Membership) | 2.00 |
| 5. | Senior Citizen | 1.00 |
| 6. | Students – Out Stations (Limited period of two years) | 0. 50 |
| 7. | Temporary members For Six months | 0.30 |
| 8. | Govt /Private Sector Service (Two years) | 0.50 |







All the 1 to 5 Categories of Memberships allowed for Hus band,wife& two children below 10 years only and 6 to 8 only Single person eligibility

## MITRA INTERNATIONAL BUSINESS CLUB

Corporate Off: 501 & Red. Off: 602, Suruthi Block, Chitra Avenue,
No.9, Choolaimedu High Road, Chennai - 600 094 Phone: 044-23743007 - 23743008
email: msmoorthy68@yahoo.co.in Web:www.mitrahmemakers.com